

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஜூன் 11, 2009 புரட்சி 8 முழக்கம் 22 விலை : ரூ.2.50

## உணர்வுகளை வெளிப்படுத்தினாலே

# தேசியப் பாதுகாப்பு சட்டம் பாயுமா?

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேள்வி



*இராணுவ வாகனங்களை - தோழர்கள் ஏன் மறிக்க முயன்றார்கள் என்ற உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல், கடுமையான குற்றமாகக் கருதி தேசியப் பாதுகாப்பு சட்டத்தைப் பயன்படுத்தும் - தமிழக அரசின் பார்வையைக் கண்டிக்கிறோம் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.*

கோவையில் ஜூன் 8 ஆம் தேதி நடந்த கண்டன கூட்டத்தில் அவரது உரை:

இந்தக் கூட்டத்தில் நாம் பெரிதும் விவாதிக்க இருக்கும் செய்தி, தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்ட தோழர்களை விடுதலை செய்யுங்கள்; வழக்கை திரும்பப் பெறுங்கள் என்பதை வலியுறுத்துவதற்கு அல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தோழர்கள் இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறதே என்பதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளத் துடிப்பவர்கள்தான். எங்களுடைய பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கூறியது போல தோழர் இராமகிருட்டிணனுக்கு இந்த வழக்கு ஒன்றும் புதிது அல்ல. 25 வயது இளைஞனாக இருந்த போதே மிசா சிறையில் ஓராண்டுக்கு மேல் இருந்தவர். அதற்குப் பிறகு மூன்றரை ஆண்டுகள் தடா வழக்கில் ராஜீவ் கொலையையொட்டி சிறையில் இருந்தவர். மறுமலர்ச்சி தி.மு.க.வின் மாணவரணி பொறுப்பாளர் சந்திரசேகர் கூட, தனக்கு இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதே என்று மகிழ்கிறவர் தானே தவிர, வருந்தக் கூடியவர் அல்ல. ஆனால், என்ன காரணத்தைச் சொல்லி, தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் பாய்ச்சியிருக்கிறார்கள் என்பதுதான் விவாதிக்கப்பட வேண்டிய செய்தி என்று நான் நினைக்கிறேன். பல நேரங்களில் தி.மு.க. ஆட்சி, இந்த சட்டத்தை ஏவியிருக்கிறது. பெரியார் சிலையை உடைத்ததற்காக எதிர்வினையாற்றிய எங்கள் தோழர்கள் மீதுகூட, தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் போட்டார்கள். அதிலே, இப்போது சிறையிலிருக்கிற எங்கள் தோழர் இலட்சுமணனும் ஒருவர். மற்ற தோழர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் போடப்பட்டதற்கு அவர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டார்கள் என்று தி.மு.க. அரசு குற்றம் சாட்டியது. என்ன சமூக விரோத செயல் என்றால், 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு எதிரான வீரப்ப மொய்லி அறிக்கையை எரித்தார்கள். விசுவ இந்து பரிஷத் மாநாட்டுக்கு எதிராக போராடினார்கள். இப்படிப்பட்ட குற்றங்களின் தொடர்ச்சியாக கோயில்களில் புகுந்து அர்ச்சகர்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்று கூறி, தேசப் பாதுகாப்புச் சட்டத்தை ஏவினார்கள். இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாக போராடியதையும், மதவெறி சக்திகளுக்கு எதிராக போராடியதையும், சமூக விரோத நடவடிக்கைகளாகவே தி.மு.க. அரசு பார்த்தது.

*இராணுவ வாகன மறியல்*

### தமிழ் ஈழ ஆதரவாளர் மீதான வழக்கு நிதி

ஈழத் தமிழர் ஆதரவாளர்கள் மீது 'இராணுவ வாகன' தாக்குதல் நடத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் தேசியப் பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள தோழர்கள் மீதான வழக்குகளை சந்திக்க பெரியார் திராவிடர் கழகம் வழக்கு நிதி திரட்ட முடிவு செய்துள்ளது.

**நிதிக் குழுவினர்:** வே. ஆறுச்சாமி, பொள்ளாச்சி இரா. மனோகரன், இல. அங்ககுமார், சு. துரைசாமி, வழக்கறிஞர் சாஜித், கோவை கோபால்.

வங்கி வழியாக வழக்கு நிதி செலுத்த விரும்புவோர் கீழ்க்கண்ட வங்கிக் கணக்குக்கு அனுப்பலாம்.

**தா.செ.மணி**, கணக்கு எண்: 555850503, இந்தியன் வங்கி, கொளத்தூர், சேலம் மாவட்டம்.

**தொடர்புக்கு:** தா. கருமலையப்பன், ஒருங்கிணைப்பாளர், யாழ் தையலகம், வ.உ.சி. வீதி, உடுமலை - 642 126. கை பேசி: 9788324474

**– பெரியார் திராவிடர் கழகம்**

**தமிழின உணர்வாளர்களே!**
**வழக்கு நிதி வழங்கிடுவீர்!**

நான் அப்போதே கேட்டேன்; திராவிட ஆட்சி என்றால், பெரியார் பார்வையில் ஆரியர்களை விலக்கி வைக்க வேண்டும்; அண்ணா பார்வையில் வடவர்களை விலக்கி வைத்திருக்க வேண்டும்; ஆனால் கலைஞர் அவர்களே, நீங்கள் யாரை விலக்கி வைத்திருக்கிறீர்கள்? நாட்டின் தலைமைச் செயலாளராக திரிபாதியை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்; பெரியார் பார்வையில் ஆரியர்; அண்ணா பார்வையில் வடவர்; காவல்துறை தலைவராக முகர்ஜியை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்; அவர் பெரியார் பார்வையில் ஆரியர், அண்ணா பார்வையில் வடவர், உள்துறை செயலாளர் மாலதி - ஆரியர். இப்படிப்பட்டவர்களை உயர் பொறுப்பில் வைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, பெரியார் வழியில் அண்ணா வழியில் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறதாம். இப்படிப்பட்ட அரசு எப்படி நடந்து கொள்ளும் என்பது நமக்குப் புரியும். ஆனால், ராணுவ வாகனங்களைத் தடுத்து நிறுத்தியதை, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் போடக் கூடிய கடுமையான குற்றமாகக் கருதக்கூடிய அந்தப் பார்வையைத் தான் நாம் கண்டிக்கிறோம். நாங்கள் அடிக்கடி சொல்வது உண்டு, பெரியார் தொண்டர்களாகிய நாங்கள், சட்டவிரோதமாகக் கூட நடந்து கொள்வோம். ஆனால், நியாய விரோதமாக நடந்து கொள்ள மாட்டோம்.

ஏற்கனவே, ஈரோடு வழியாக, ராணுவ டாங்குகள் ஏற்றப்பட்ட வண்டிகள் சென்றது. அதை பத்திரிகைகளும் செய்தியாக வெளியிட்டன. பொது மக்களும் பார்த்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால், சிங்கள ராணுவத்துக்கு பயிற்சியும் தந்தீர்கள். தமிழகத்தில் அப்படி பயிற்சிப் பெற வந்த சிங்கள ராணுவத்தினரை தடுத்தவுடன், வேறு மாநிலத்துக்கு பயிற்சிக்கு அனுப்பினீர்கள். எங்கள் தொப்புள் கொடி உறவுகளை, ரத்தங்களை, ஈழத் தமிழரைக் கொல்வதற்கு தொடர்ந்து ஆயுதங்களும் பயிற்சிகளும் அளித்த நிலையில் அதை எதிர்க்க வேண்டும் என்ற உணர்வின் கொந்தளிப்பின் வெளிப்பாடுதான் இந்த நிகழ்ச்சி. உடைந்த கண்ணாடிகளின் மதிப்பையெல்லாம் வழக்கில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அது முக்கியமல்ல; உணர்வைப் புரிந்து கொள்ள

(2 ஆம் பக்கம்)

# புலிகள் மீண்டும் களத்துக்கு வருவார்கள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். தேசப் பாதுகாப்பை குலைப்பது அல்ல எங்கள் நோக்கம். அப்படிப்பட்ட நோக்கத்தோடு நாங்கள் செயல்பட்டு, அதற்காக நீங்கள் வழக்கு போட்டிருந்தால், நாங்கள் அதை ஏற்றுக் கொண்டிருப்போம்.

பீகாரில் - என்ன நடக்கிறது? தொடர் வண்டி - ஊரில் நிற்கவில்லை என்பதற்காக, தொடர் வண்டியையே எரிக்கிறான். கருநாடகத்தில் கன்னட செய்தியை படிக்கும் நேரத்தில் சமஸ்கிருத செய்தியைப் படித்ததற்காக தொலைக்காட்சி நிலையத்துக்குள்ளேயே சென்று அடித்து உடைத்தார்கள். இதற்கெல்லாம் அந்த மாநில அரசுகள் அவர்கள் மீது தேசிய பாகாப்புச் சட்டத்தைப் போடவில்லை. சிறு வழக்குகளைப் போட்டார்கள். இரண்டு, மூன்று நாட்களில் அவர்கள் வெளியே வந்து விட்டார்கள். ஆனால், நம்முடைய அரசு நம்முடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ள மறுக்கிறது என்பதுதான் நம்முடைய குற்றச்சாட்டே தவிர தோழர்கள் மீது வழக்குப் போட்டதற்காக அல்ல.

இப்போது, ஈழத்தில் தமிழர்கள் மிக மோசமான நிலையில் உள்ளார்கள். ஏற்கனவே அவர்கள் வாழ்ந்தது அவலமான வாழ்க்கை. 25 ஆண்டுகள் தொடர்ந்து மின்சாரத்தையே பார்க்காமல் வாழ்ந்தவர்கள். யாழ்ப்பாணத்தில் கடந்த 13 ஆண்டுகளாக மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை வெளியில் தொடர்ந்து நடமாட முடியாமல் - ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கிறது. வேலைக்குப் போய் ராணுவ சோதனைச் சாவடிகள் வழியாக வரும் இளைஞர்கள் எல்லாம், தங்கள் பழக்கத்திற்கு மாறாக குடித்துவிட்டு வருவதுதான் வழக்கமாம். என்னடா, இப்படி, எல்லோரும் குடிக்கத் தொடங்கி விட்டார்களே என்று கேட்டபோது, குடித்தால்தான் எங்களை விடுதலைப் புலிகள் என்று ராணுவம் சந்தேகிக்காது. எனவே குடிக்கிறோம் என்று சொல்லி வாழ்ந்த நாடாக அது இருந்தது. இப்படிப்பட்ட அவலங்களில், நம்முடைய அப்பாவி மக்கள் அங்கே வாழ்ந்தார்கள். அதைவிட அதிகமான அவலங்களை, இப்போது முகாம்களில், அங்கே தமிழர்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை முற்றாக ஒழித்து விட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் ராணுவத்துக்கு ஒரு லட்சம் பேரை புதிதாக சேர்க்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கமே அழிந்து போன பிறகு, எதற்கு ஒரு லட்சம் பேரை ராணுவத்தில் சேர்க்கிறார்கள்? இந்தியா மீது படை எடுக்கவா? உண்மையிலே - விடுதலைப் புலிகள் ஒழிந்து விட்டதாக சிங்களவன் நம்பவில்லை. அது மீண்டும் உயிர்ப்பிக்கும்; எழுச்சியோடு போராடும் என்றுதான் அவன் நம்பிக் கொண்டிருக்கின்றான். ஆனால், புலிகளை ஒழித்ததாக பொய்யாக சொல்லிக் கொண்டிருக்கிறான் (கைதட்டல்). இல்லாவிட்டால் ஏன் ஒரு லட்சம் பேரை படையில் சேர்க்கிறார்கள்?

இப்போதே அவன் இந்தியாவை எப்படி மதிக்கிறான் என்பதை இந்திய அரசு பார்க்க வேண்டும். நேற்று - நம்முடைய வெளியுறவு அமைச்சர், இலங்கை அரசு தமிழர்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்றும், அவர்களுக்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்றும் சொன்னார். அவ்வளவுதான் சொன்னார். அதற்கு பதிலடி தந்து இலங்கையின் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் இணைய தளத்தில் ஒரு கட்டுரையை வெளியிடுகிறார்கள். ராஜபக்சேயின் தம்பி - கோத்த பய ராஜபக்சேயின் பொறுப்பில் இருக்கிறது அந்த இணைய தளம். இப்படி ஒரு கருத்தை வெளியிட்டதற்காக கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கும் அக்கட்டுரை.

“நாங்கள் கிருஷ்ணாவிடம் (வெளி விவகாரத் துறை அமைச்சர்) கேட்பது என்னவென்றால், தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்று எங்களுக்கு கூற நீங்கள் யார்? இறையாண்மை உள்ள நாடான சிறீலங்காவுக்கு ஆட்சி எப்படி செய்ய வேண்டும் என்பது தெரியும். நீங்கள் உங்கள் வேலையை மட்டும் பார்த்துக் கொண்டிருங்கள். இல்லாவிட்டால், சிறீலங்காவுக்கு எதிராக பேசி வந்த அய்க்கிய நாடுகள் சபையின் மனித உரிமை விவகாரங்களுக்கான ஆணையாளர் நவநீதம் பிள்ளை எப்படி ஒதுங்கிக் கொண்டாரோ, அதேபோல் நீங்களும் ஒதுங்கிக் கொள்ளுங்கள்” என்ற பதிலடி தந்திருக்கிறான். இன்னும் ஒரு படி மேலே போய் அந்தக் கட்டுரையில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சகம் கூறுகிறது:

“இந்தியாவிற்கு மேலும் சில விடயங்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம்; இலங்கைத் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் வழங்க மாட்டோம்; ஏனெனில் தனிநாடு கோரி தமிழர்கள் போராட்டம் நடத்துவதற்கு அதுவே போதுமானதாக அமைந்துவிடும்” என்று கூறிவிட்டான். ராஜபக்சேவும் இதைத்தான் கூறியிருக்கிறார். இனி இலங்கையில் சிறுபான்மை, பெரும்பான்மை என்று எதுவும் கிடையாது. எல்லாம் ஒரே இலங்கை என்று ராஜபக்சே கூறுகிறார். எனவே தமிழர்கள் தமிழைப் பேசினாலும், தமிழர்கள் என்று ஒரு தனி இனம் இருக்கிறது என்பதை அவர்கள் அங்கீகரிக்கப் போவதில்லை. ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் செய்ததைப் போல வடக்கு மாகாணத்திலும், சிங்களக் குடியேற்றத்தை அமுல் நடத்துவார்கள். இதை நான் சொல்லவில்லை; இரத்தினகுமார் என்று ஒரு இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி இருந்தார். இலங்கையில் அரசியல் ஆலோசகராகப் பணியாற்றியவர். அவர் அண்மையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் எழுதுகிறார்:

“சிங்களர்களுக்கு - சிக்கலை தீர்ப்பது எப்படி என்பது தெரியும். கிழக்கு மாகாணத்தில் தீர்த்தது போல் வடக்கு மாகாணத்திலும் தீர்த்து விடுவார்கள்” என்று அவர் எழுதுகிறார்.

“கறை படிந்த ரத்தக் கைகளோடு இதை எழுதுகிறேன்” என்று அவர் கூறுகிறார். இத்தனைக்கும் அந்த அதிகாரி தமிழர் அல்ல; அவருக்குக்கூட அந்த உணர்வு இருக்கிறது.

நண்பர் பாலமுருகன் கூறியது போல், இரண்டாம் உலகப் போர் முடிவடைந்து - போருக்கு எதிரான மனித உரிமைகளுக்கான கொள்கைகளை உருவாக்கினார்கள். அதில், இனப் படுகொலை தான் மிகப் பெரும் குற்றம் என்று வரையறுக்கப்பட்டது. அதற்குப் பிறகு இரண்டு மாநாடுகள் நடத்தி, அதில், தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டன. அந்தத் தீர்மானங்களுக்கு காப்பகமாக விளங்கிய நாடு சுவிட்சர்லாந்து. அதே சுவிட்சர்லாந்துதான் இப்போது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தையும் அய்.நா.வில் கொடுத்தது. ஆனால், அதுவும் ‘வழவழா கொழகொழா’ தீர்மானமாகவே இருந்தது. “மனித உயிர்கள் இழப்புக்கு கவலை தெரிவிக்கிறோம். இதற்கு விடுதலைப்புலிகளும் காரணம். இந்தக் குற்றச்சாட்டுகளை இலங்கை அரசு விசாரிக்க வேண்டும்” - என்று தான் அத் தீர்மானம் கூறியது.

இலங்கை அரசே விசாரிக்கலாம் என்பதுதான் தீர்மானம். இலங்கை அரசைக் கண்டிக்கவும் இல்லை; இந்தத் தீர்மானத்தைத் தோற்கடிக்கத்தான், இந்தியா முனைந்து செயல்பட்டது, தோழர்களே!

ஏற்கனவே கடந்த ஆண்டு இலங்கையை அய்.நா.வின் மனித உரிமை ஆணையத்தில் இணைக்க வேண்டும் என்ற ஒரு முயற்சி வந்தபோது, அதை இந்தியா தான் முன்னெடுத்தது. ஆனால், இணைக்க முடியவில்லை என்பது வேறு. அப்போதும் இந்தியா துணை நின்றது. இப்போதும் துணை நிற்கிறது. ஏதோ, உலக நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்துவிட்டதாக யாரும் கருதிக் கொண்டு விடாதீர்கள். இலங்கை அரசே விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக்கூட, இந்தியா ஏற்கவில்லை என்பதுதான் உண்மை. எனவே நம்முடைய இந்திய அரசு இலங்கையின் இனப்படுகொலைகள், போர் குற்றங்கள் வெளியே தெரிந்து விடக்கூடாது என்பதற்காக போராடிக் கொண்டிருக்கிறது. அந்த அரசிடம் தான் நாம் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில் தோழர் தா.பா. கூறியது போல்தான், நானும் நமது கடமையை உங்களிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்துவிட்டது; ஓய்ந்து விட்டது என்று, சிங்களவன் சொல்வதை நாம் நம்பிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நமக்குத் தெரியும். மீண்டும் அது வீச்சோடு உருவெடுக்கும் என்பது நமக்குத் தெரியும். சிறிய சிறிய தாக்குதல்களை பெண்கள் மீது நடத்தப்பட்ட காரணத்தால் தான், புலிகள் இயக்கம் போராடத் தொடங்கியது. ஆனால் - இப்போது நடந்து முடிந்துள்ள இனப்படுகொலைக்கு எதிர்காலத்தில் பதிலடி எப்படி எல்லாம் கிடைக்கப் போகிறது என்பது, நமக்குத் தெரியாது. காரணம், அவ்வளவு கொடுமை நடந்திருக்கிறது (பலத்த கை தட்டல்). அதற்கு காலம் எப்போது வரும் என்பதும் நமக்குத் தெரியாது. சில மாதங்கள் ஆகலாம்; அல்லது ஆண்டுகள் ஆகலாம்; எப்போது என்பது நமக்குத் தெரியாது. இதில் நம்முடைய கடமை என்ன?

பிச்சைக்காரர்களே இல்லாத நாடாக இருந்த ஈழத் தாயகத்தில் - அந்த நாட்டுத் தமிழர்கள் அனைவரும் அகதி முகாம்களில் இருந்து கொண்டு தட்டேந்தி நின்று கொண்டிருக்கிறார்கள். பிச்சைக்காரர்களையே சந்திக்காத மக்கள் அனைவரும் இப்போது பிச்சைக்காரர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கிறோம். அய்.நா. மன்றத்திலே ‘சாட்சியே இல்லாத போர்’ என்று கூறினார்கள். உலகத்தில் எந்தப் போரும் இப்படி நடக்கவில்லை.

இப்படி எல்லாம் போரை நடத்துவதற்கு இலங்கைக்கு கற்றுக் கொடுத்ததே இந்தியா தான். இந்திய ‘அமைதிப் படை’ என்ற பெயரில் - அங்கே இந்திய ராணுவம் சென்றபோது - ‘ஈழ முரசு’, ‘உதயன்’ பத்திரிகை அலுவலகங்களைத்தான் முதலில் தாக்கினார்கள். யாழ்ப்பாண மருத்துவமனையில் குண்டு வீசி, மருத்துவர்களையும் நோயாளிகளையும் கொன்றது இந்திய ராணுவம் தான். ஜானி போன்ற தூதர்களாக செயல்பட்டவர்களைக் கொன்றவர்கள் - இந்திய அமைதிப் படைத்தான்.

எனவேதான் வெள்ளைக் கொடி ஏந்தி சமரசம் பேச வந்த நடேசனையும் புலித் தேவனையும் ராணுவம் சுட்டுக் கொன்றது என்றால், அது இந்தியா காட்டிய வழிதான். இதுபற்றி எல்லாம் விரிவாகப் பேச நேரமில்லை.

போர் முனையில் அரசே நியமித்த அரசு அதிகாரிகள் அங்கே பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள் என்ன சொல்கிறார்கள். பார்த்திபன் என்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படி அங்கே அரசால் நியமிக்கப்பட்டவர். அந்த பொறுப்புக்கு அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் என்று கூறுவதில்லை. ‘கவர்ன்மென்ட் ஏஜென்ட்’ (அரசு முகவர்) என்று கூறப்படுகிறது.

வவுனியாவின் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த பார்த்திபன் போர் முடிவதற்கு இரு தினங்கள் முன்பு வரை 18 ஆம் தேதி வரை களமுனையில் இருந்தவர். அவர் இப்போது சிறையில் இருக்கிறார், எதற்காக?

போர் நடக்கும் பகுதியில் 70000 தமிழர்கள் மட்டுமே இருப்பதாக இலங்கை அரசு கூறியது. அதை நம்முடைய வெளியுறவுத் துறையும் ஏற்றுக் கொண்டது. ‘இந்து’ ஏடும் எழுதியது. அப்படி சொன்னபோது அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் பார்த்திபன் தான் 80000 குடும்பங்கள் இருக்கின்றன என்று சொன்னவர். இவர்கள் எல்லாம் **70000 பேர்** என்று சொன்னபோது, **80000 குடும்பங்கள்** என்று சொன்ன வரை, இப்போது சிறையில் வைத்திருக்கிறார்கள். மூன்று மருத்துவர்கள் உள்ளே இருந்து பணியாற்றினார்கள். சண்முகராசா, சத்தியமூர்த்தி மற்றும் ஒருவர், 16 ஆம் தேதி வரை உள்ளே இருந்தார்கள். அவர்கள்தான், கடைசிவரை போரை பார்த்தவர்கள்.

அந்த மருத்துவர்களையும் கைது செய்து உள்ளே வைத்திருக்கிறார்கள். இவ்வளவு குண்டு வீச்சுகளுக்கும் இடையில் பதுங்கு குழியில் பதுங்கி வெளியே வந்து திறந்த வெளியில் சிகிச்சை செய்த இந்த மருத்துவர்களுக்கு சர்வதேச மருத்துவக் குழு விருது வழங்கி கவுரவித்திருக்கிறது. அந்த மூன்று மருத்துவர்களும் இப்போது சிறையில் இருக்கிறார்கள்.

இந்திய அரசுக்கு, குறைந்தபட்ச மனிதாபிமானம்
4 ஆம் பக்கம்

# ஈழத் தமிழர் மறுவாழ்வுத் திட்டங்களை சர்வதேச அமைப்புகள் வழியே நிறைவேற்ற வேண்டும்!

## கோவை கூட்டத்தில் – தா. பாண்டியன் வற்புறுத்தல்

*ஈழத் தமிழர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்களை இலங்கை அரசு மூலம் நிறைவேற்றாமல் அய்.நா. போன்ற சர்வதேச அமைப்புகள் வழியாகவே செயல்படுத்த வேண்டும் என்று கோவையில் நடந்த கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநில பொதுச் செயலாளர் தா.பாண்டியன் வற்புறுத்தினார். அவரது உரை:*

நம்மோடு இந்த மேடையில் இருக்க முடியாது சிறையில் இருக்கும் பெரியார் திராவிடர் கழக பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், ம.தி.மு.க. மாணவரணி பொறுப்பாளர் சந்திரசேகர், பெரம்பலூர் மாவட்ட பெரியார் திராவிடர் கழக அமைப்பாளர் இலட்சுமணன் மற்றும் வேறு பல தோழர்கள் அநியாயமாக கைது செய்யப்பட்டுள்ளதை கண்டிக்க நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

நாமும் சரி, சிறைக்குள் இருப்போரும் சரி, கடந்த சில ஆண்டுகளாகவே அண்டை நாடு என்றால் மட்டுமல்ல, நம்முடைய சொந்த உறவுகள் என்ற அடிப்படையிலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக சில கோரிக்கைகளை வைத்துப் போராடி வந்திருக்கிறோம். போரை நிறுத்தச் சொல்லியும், தமிழர்களைக் கொன்று குவிக்கும் அரசுக்கு, ஆயுதங்களை வழங்காதே என்று வற்புறுத்தியும், சமஉரிமையை வழங்க மறுத்தாலும் முதலில் அடிப்படை உரிமைகளையாவது கொடுக்கத் தயாரா என்று கேட்டும் அல்லது போராடும் இயக்கத்துக்கு எதிராக, ஆயுதங்களை வழங்காமலாவது இருங்கள் என்றும், நாம் வற்புறுத்தி வந்தோம். தனித்தும் கேட்டோம். மத்திய அரசிடம் இணைந்தும் கூட - இலங்கைக்கு கோரிக்கை வைத்தோம். வெட்கத்தை விட்டு சொல்ல வேண்டுமானால் நாம் ஆத்திரப்பட்டு, கடுமையான போராட்டங்கள்கூட எதையும் நடத்தவில்லை. சுவீடனில் ஒரு சாமியார் அடித்துக் கொல்லப்பட்டார். மற்றொரு சாமியார் அடித்துக் காயப்பட்டார் என்றவுடன், பஞ்சாபில் நான்கு நாட்கள் நாடே நிலைகுலைந்து பள்ளி கல்லூரிகள் மூடப்பட்டு, ரயில் பெட்டிகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. ரயிலைக் கொளுத்தினால்தான், டெல்லிக்காரன் காதுக்கு எட்டும் என்று பஞ்சாப்காரன் புரிந்து வைத்திருக்கிறான். ஆனால் தமிழர்கள் புரிந்து கொள்வதற்கு இன்னும் அதிக காலம் தேவைப்படுகிறது. *(கைதட்டல்)*

ஆஸ்திரேலியாவில் இந்திய மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள் என்றவுடன், உடனே நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுகிறது. தாக்குதலை நிறுத்தப் போகிறாயா, இல்லையா? என்று கேட்கப்படுகிறது. கேட்கப்பட வேண்டியது நியாயம்தான். ஆனால், இந்தத் தமிழன் ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்படும்போது ஒரு கண்டனக் குரல்கூட கேட்கவில்லையே ஏன், என்று என் இதயம் கேட்குமா? கேட்காதா? அரை நூற்றாண்டுக்கு மேல் நடக்கும் இந்தப் போராட்டம் நேர்மையான போராட்டமா? இல்லையா, என்பதையாவது சொல்! இந்தியாவின் பிரதமர் ராஜீவ் ஒப்பந்தம் போட்டு அங்கே படையை அனுப்பி வைத்தார். அது ஒரு காலகட்டம். அப்போது படையை அனுப்பினாய், இப்போது படைக்கலன்களை அனுப்பி வைத்தாய். நான் இந்த நாட்டின் வரி செலுத்தக்கூடிய ஒரு குடிமகன். என்னுடைய வரிப்பணத்தில் எனது சொந்தத் தாயைக் கொல்லுவதற்கு ஏனடா, துப்பாக்கியை அனுப்பி வைக்கிறாய் என்று கேட்கக்கூடிய உரிமை எனக்கு உண்டா? இல்லையா?

தமிழினத் தலைவர் என்று மகிழும் கலைஞர் கருணாநிதி, கடந்த டிசம்பர் 4 ஆம் தேதி டெல்லிக்கு அழைத்த போது நானும் வந்தேனே! பிரதமரிடம் ஆங்கிலத்தில் பேசுமாறு என்னைக் கேட்டபோது, நானும் பிரதமரிடம் வலியுறுத்தினேனே!

உடனே - ராஜீவ் படுகொலைக்குப் போய்விடுவார்கள். விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டு பட்டியலை வாசிக்கத் தொடங்கிவிடுவார்கள். எத்தனை காலத்துக்கு இதைத் திரும்பத் திரும்ப கூறப் போகிறார்கள்?

பன்னாட்டுப் படை உதவிகளோடு - ராஜபக்சே என்ற கொடுங்கோலன் தமிழர்களைக் கொன்று குவிக்கிறானே, உலக நாடுகளும், மனித குலமும் கண்டிக்கிறதே, நீ மட்டும் ஏன் கண்டிக்க மறுக்கிறாய்?



டெல்லிக்குப் போனதுபோது மருத்துவர் ராமதாசு கோரிக்கைகளை எழுதிக் கொண்டே வந்து எல்லோருக்கும் கொடுத்தார். அப்போது அவர் மகன் மத்திய அமைச்சர். நான் கூட கேட்டேன், மிகுந்த நம்பிக்கையோடு வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே என்று, அவர் சொன்னார். இவர்கள் மீது நம்பிக்கை இல்லை. எனவே தான் எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன் என்று *(சிரிப்பு)* அப்போது நான் பிரதமரிடம் கேட்டேன். பாவமன்னிப்பு வழங்கக் கூடிய உலக கத்தோலிக்கர்களின் தலைவர் போப் கூட போரை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தும் போது, பிரதமராகிய நீங்கள், உத்தரவாகக்கூட கூற வேண்டாம். ஒரு பொது வேண்டுகோளாக, போரை நிறுத்த இந்தியா விரும்புகிறது என்று கூறக் கூடாதா என்று கேட்டேன்.

அதற்கு பிரதமர், அப்படிச் சொன்னால், இரு நாடுகளுக்கும் நல்லுறவு பாதிக்கும் என்றார். தமிழர்களைக் கொன்று குவிக்கும் எலும்புக் கூடுகளின் மீதுதான், இரு நாடுகளின் நல்லுறவு கட்டப்படுகிறதா என்று கேட்கிறேன்.

இப்போது இலங்கைக்கு எதிராக அய்.நா.வில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. நியாயமாக இந்தியா தானே, இத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். இதற்கு இந்தியாவுக்கு சகல உரிமையும் இருக்கிறதே. பல ஆண்டுகளுக்கு முன்பே அங்கே நடந்த கலவரத்தால் இங்கே அகதிகள் வரத் தொடங்கி விட்டார்களே. இன்று வரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்களே. இந்தக் காரணத்தைக் காட்டி, இந்தியா, இலங்கைக்கு எதிராகத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கலாமே! அவன் அடிப்பான், அடி வாங்கிக் கொண்டு அநாதையாக ஓடி வருகிறவர்களுக்கு சோறு போட இந்தியாவா? அடிப்பதை நிறுத்து; இந்தியாவுக்கு அகதிகளாக வந்தவர்களை திருப்பி எடுத்துக் கொள் என்று கேட்க இந்தியாவுக்கு உரிமை இருக்கிறதா? இல்லையா?

கிளிநொச்சியைப் பிடித்த பிறகு இன்னும் 400 மீட்டர் பாக்கி; மூன்றே நாளில் போர் முடிந்து விடும் என்று ராஜபக்சே அறிவித்தான். ஆனால், 400 மீட்டரை பிடிப்பதற்கு 2 மாதங்களுக்கு மேல் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது.

முற்றாக போர் முடிந்துவிட்டது என்று அறிவித்த பிறகு, இந்திய அரசு என்ன கோரிக்கையை வைத்திருக்க வேண்டும்? சர்வதேச பத்திரிகையாளர்களை தொலைக்காட்சியினரை போர் நடைபெற்ற7 பகுதிக்கு உடனே அனுப்ப வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்க வேண்டுமா? வேண்டாமா? தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாவது நேரில் சென்று பார்வையிட அனுமதி கோரியிருக்க வேண்டாமா? இதைச் செய்யாமல், 20000 மக்களை இனப்படுகொலை செய்த அரசோடு இந்தியாவின் நல்லுறவு கெட்டுவிடக் கூடாது என்று கூறுகிறீர்களே; இது நியாயம் தானா? விடுதலைப்புலிகள் பயங்கரவாத செயலில் ஈடுபட்டதாகக் கூறி தடை போட்டவர்கள். இனப்படுகொலை செய்யும் இராஜபக்சே அரசை கொலை வெறி பிடித்த அரசு என்று அறிவித்திருக்க வேண்டாமா?

இன்று உலகம் முழுதும் இலங்கையில் நடந்தது 'இனப்படுகெலை' என்று கூறுகிறது. இனப்படுகொலை செய்யும் நாடு எப்படி ஒரு நட்பு நாடாக இருக்க முடியும்? அது ஒரு ஜனநாயக நாடுமல்ல; மனித உரிமைகளை மதிக்கும் நாடுமல்ல; அது ஒரு காட்டுமிராண்டி நாடு. அந்த நாட்டோடு பேசி - தமிழர்களுக்கு அனைத்து உரிமைகளையும் வாங்கித் தரப் போவதாக இப்போது கூறுகிறார்கள். இதையும் நீ தான் கூறிக் கொண்டிருக்கிறாயே தவிர, அவன் இது பற்றி ஒரு வரியாவது சொன்னானா? அவன் சொல்ல மாட்டான். அவனை உன்னால் பேச வைக்க முடியாது. அவனை பேச வைக்க - சர்வதேச நாடுகள் அய்.நா. வழியாக எடுத்த முயற்சிகளுக்கும் நீ முட்டுக் கட்டைப் போட்டு விட்டாய். நீயும் அவனைப் பேச வைக்க மாட்டாய். பேச வைக்க முயலுவோரையும் செய்ய விட மாட்டாய். ஆக - இலங்கைத் தமிழர்களுக்கு முன்பைவிட தமிழர்களாகிய நாம், ஆற்ற வேண்டிய பெரும் கடமை இப்போது நமக்கு வந்து விட்டது. வரலாறு நம்மீது அதை சுமத்தியிருக்கிறது.

இப்போது கோவை இராமகிருட்டிணன் உள்ளிட்டோர் மீது தேசப் பாதுகாப்புச் சட்டம் பாய்ந்திருக்கிறது. முதலில் - அடிப்படையான கேள்வி, யாரிடமிருந்து யார், இந்த தேசத்தைப் பாதுகாப்பது?

பா.ம.க.வைச் சார்ந்த காடுவெட்டி குரு மீது தேசப் பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டபோது, நான் முதலமைச்சரை சந்திக்கச் சென்றிருந்தேன். அப்போது குரு என்ன குற்றம் செய்தார் என்று கேட்டபோது, உடனே வீட்டில் தயாராக வைத்திருந்த ஒரு திரையில் அவரது உரையை முதலமைச்சர் எனக்கு போட்டுக் காட்டினார். அவரும் ஏதேதோ, "செந்தமிழில்" தான் பேசியிருந்தார். எல்லாம் குடும்பத்தைப் பற்றிய கதைகளாக இருந்தன. எனக்கு எதுவுமே புரியவில்லை என்பதால் நிறுத்தச் சொன்னேன். முதலமைச்சர் அதற்கு மேல் என்னால் பார்க்க முடியாத மனநிலைக்கு வந்துவிட்டதாகக் கருதிக் கொண்டார். அப்போது நான் கேட்டேன் - குரு பேச்சில், ஏதேதோ, தனிப்பட்ட பிரச்சினைகள் பற்றி எல்லாம் பேசுகிறார். அவர் பேச்சிலே அம்மா வருகிறார். பிள்ளை வருகிறார். எங்கே தேசம் வருகிறது? பாதுகாப்பு வருகிறது? என்று கேட்டேன். அப்போது முதல் தான் முதல்வருக்கு என் மீது கோபமே வந்தது. என்னுடைய காருக்கு தீ வைக்கப்பட்டது. இதுவரை தீ வைத்த எந்தக் குற்றவாளியையாவது பிடித்து கூண்டில் நிறுத்தினார்களா? தீ வைத்த குற்றவாளியைப் பிடித்து, தண்டிக்காதவர்கள், தீ வைப்பதைத் தடுக்கப் போன, கோவை இராமகிருட்டிணனையும், தோழர்களையும் பிடித்து தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்வார்கள் என்றால், அந்தச் சட்டத்தைத்தான் தீ வைத்துப் பொசுக்க வேண்டும். அப்படி ஒரு சட்டமே தேவையில்லை.

அதே சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கொளத்தூர் மணி, இயக்குநர் சீமான், நாஞ்சில் சம்பத் ஆகியோரை தேசப் பாதுகாப்புக்கு தொடர்பே இல்லாமல் கைது செய்துள்ளார்கள் என்று நீதிமன்றம் விடுதலை செய்த பிறகும் இந்த அரசு திருந்தவில்லை. எனவே தேசப் பாதுகாப்புச் சட்டத்தைத் திரும்பப் பெற்று கைது செய்தவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வற்புறுத்துகிறேன். இதை வலியுறுத்தி எங்கள் கட்சியில் தீர்மானமும் நாளை வரவிருக்கிறது.

போர் முடிந்த பகுதியில் உடனே சர்வதேச பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் நேரில் சென்று பார்வையிட இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்களை ராஜபக்சே அரசு மூலம் செய்யக் கூடாது. அய்.நா. சர்வதேச அமைப்புகள் வழியாக மட்டுமே மறுவாழ்வுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். தாயைக் கொன்றவனே பிள்ளைக்குப் பாலூட்ட அனுமதிப்பதா?

கொல்லப்பட்ட மக்களின் பட்டியலை தயாரித்து, அதற்குக் காரணமானவர்களை யுத்தக் குற்றவாளிகள் கூண்டில் ஏற்றி விசாரிக்க வேண்டும். சிந்திய ரத்தத்துக்கு நியாயம் கேட்க வேண்டும்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் - ரசிகர் மன்றங்களின் ரசிகர்களாகி விடாமல் போர்க்குணம் கொண்டவர்களாக போராட வேண்டும் என்று கூறி முடித்தார்.

**– நமது செய்தியாளர்**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# 65 இல் இந்தி எதிர்ப்புக் கலவர வழக்கில் அண்ணாவின் அணுகுமுறை

போராட்ட வடிவங்களை சூழ்நிலைகளே தீர்மானிக்கின்றன. ஈழத் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகிய சூழலில் ஆவேசத்தின் வெளிப்பாடாய் வெடித்துக் கிளம்பும் போராட்டங்களின் உணர்வுகளைக் கவனத்தில் கொள்ளாமல் சட்டங்களைப் புரட்டிக் கொண்டிருக்க முடியாது. 1965 இல் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு போராட்டம் நடந்தபோது தமிழகமே பற்றி எரிந்தது. மாதக்கணக்கில் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டு கிடந்தன. ரயில்கள் தீ வைக்கப்பட்டன. காவல்துறை ஆய்வாளர் ஒருவரே உயிருடன் எரிக்கப்பட்டார். கலைஞர் கருணாநிதியை அன்றைய காங்கிரஸ் ஆட்சி பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தது. பின்னர் 1967 இல் அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன், வன்முறை குற்றச்சாட்டுகளின் கீழ் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளையும் அரசு திரும்பப் பெறுவதாக அறிவித்தார். இந்தியை எதிர்த்து தமிழகத்தில் மூண்டெழுந்த ஆத்திரத்தின் ஆவேசத்தின் வெளிப்பாடாகவே அந்தப் போராட்டத்தை அவர் பார்த்தார். அதுதான் அண்ணாவின் அணுகுமுறை.

அதேபோல் ஒவ்வொரு நாளும் ஈழத் தமிழர்கள் கொத்து கொத்தாக கொன்று குவிக்கப்படும்போது இனப்படுகொலைக்கு உதவிட இந்தியாவின் ஆயுதம் போகிறதோ என்ற கொந்தளிப்பில் கொதித்து எழுந்த உணர்வுகளின் வெளிப்பாடாகவே இந்த இராணுவ வாகன மறிப்பையும், கலைஞர் பார்த்திருக்க வேண்டும். அதுதான் அண்ணா காட்டிய வழிமுறை. ராணுவத்துக்கு எதிராக ரகசிய திட்டம் தீட்டி நடத்தப்பட்ட போராட்டம் அல்ல அது. அதனால் தான் பத்திரிகையாளர்களுக்கும் தொலைக்காட்சியினருக்கும் தகவல் தெரிவித்து அங்கே வரச் சொல்லி இருக்கிறார்கள்.

இயக்கங்களைக் கடந்த பொது மக்களும், பெண்களும் ஆவேசமாய் இராணுவ வாகனங்களைத் தடுத்துள்ளனர். உணர்வுகள் வரம்பு மீறி விடாமல் தடுத்து நிறுத்தும் பொறுப்பான கடமையை கழகத்தின் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் செய்துள்ளார். உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயல்படும் அண்ணாவின் அணுகுமுறையைக் கைவிட்டு, சட்டங்களைப் புரட்டும் அணுகுமுறையை இந்த அரசு கைவிட வேண்டும்; அது தமிழின உணர்வுக்கு எதிரான அணுகுமுறை.

**– கோவை கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர்**
**விடுதலை இராசேந்திரன்.**

## மலையாள அதிகாரிகள் பிடியில் 'இந்திய' நிர்வாகம்

மத்திய அமைச்சரவையில் கேரள அமைச்சர்களுக்கு முக்கிய பொறுப்புகளும், ஏராளமான மலையாள அதிகாரிகளுக்கு மத்திய அரசு பணியும் வழங்கப்பட்டுள்ளது.

மத்தியில் மீண்டும் பதவி ஏற்றுள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஒரு முடிவை எடுத்துள்ளது. அமைச்சரவை செயலாளர் கே.எம்.சந்திரசேகர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோரது பணி காலத்தை நீட்டிப்பதற்கு எடுத்துள்ள முடிவால், நாட்டின் உயர் பதவியில் முத்திரை பதிக்கும் பெருமை கேரளாவுக்கு கிடைத்துள்ளது.

இவர்கள் தவிர வெளியுறவு செயலாளர் சிவ் சங்கர் மேனன், பிரதமரின் முதன்மை செயலாளர் டி.கே.ஏ.நாயர், நாடாளுமன்ற செயலாளர் ஜெனரல் பி.டி.ட்டி. ஆச்சாரி குடியரசு தலைவர் செயலாளர் கிறிஸ்டி பெர்னாண்டஸ், உள்துறை செயலாளராக அறிவிக்கப்பட்டுள்ள ஜி.கே.பிள்ளை ஆகியோரும் கேரளாவை சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

அதேபோல், தொழிலாளர்கள் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சக செயலாளர் திருமதி சுதா பிள்ளை மற்றும் வணிகத் துறை செயலாளரான அவரது கணவர் கோபால் கிருஷ்ண பிள்ளை ஆகியோரும் மலையாளிகள்தான். இது மட்டும் அல்லாமல், சமீபத்தில் தொடங்கப்பட்ட தேசிய விசாரணை ஆணையத்தின் (என்.ஐ.ஏ.) முதல் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட ராதா டிவினோத் ராஜூவும் கேரளாவை சேர்ந்தவர்தான்.

அதோடு வேளாண்மை செயலாளர் டி.நந்தகுமார், சட்டத்துறை செயலாளர் டி.கே.விசுவநாதன், விமான போக்குவரத்துத் துறை செயலாளர் எம்.மாதவ நம்பியார், இஸ்ரோ தலைவரும், விண்வெளி ஆராய்ச்சித் துறை செயலாளருமான ஜி.மாதவன் நாயர் ஆகியோரும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

இதேபோல், கனிம வளர்துறை செயலாளர் சாந்தா ஷீலா நாயர், கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவன தலைவர் லீனா நாயர் ஆகியோரும் கேரளாவை சேர்ந்தவர்கள் .

அதிகாரிகள் மட்டத்தில் மட்டும் அல்லாமல், அமைச்சர்கள் வட்டத்தை பார்த்தாலும் கேரளா மாநிலத்தை சேர்ந்தவர்கள்தான் அதிகம் இடம் பெற்றுள்ளனர். கேபினட் அமைச்சரவையில் 2-வது முறை ராணுவ அமைச்சராக ஏ.கே.அந்தோணி, வெளி நாட்டில் வாழும் இந்தியர் விவகாரங்கள் துறை அமைச்சராக வயலார் ரவி ஆகியோரும் இணை அமைச்சர் பதவிக்கு இரயில்வே துறையில் இ.அகமது, வேளாண்மை, நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறையில் கே.வி.தாமஸ், உள்துறையில் முல்லப் பள்ளி ராமச்சந்திரன், வெளி விவகாரத் துறையில் சஷி தரூர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கேரளாவை சேர்ந்தவர்கள்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் தொடர்புடைய எம்.கே. நாராயணன், சிவசங்கர மேனன், ஏ.கே. அந்தோணி, விஜய் நம்பியார் (அய்.நா. அதிகாரி), அவரது சகோதரர் சதீஷ் நம்பியார் (இலங்கை ராணுவ ஆலோசகர்) ஆகிய அனைவருமே மலையாளிகள் தான்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்குமானால், இந்த மாவட்ட ஆட்சித் தலைவரையும், மருத்துவர்களையும் விடுவித்து, சர்வதேச பத்திரிகையாளர் முன் நிறுத்தி, என்ன நடந்தது என்பதை அவர்கள் வழியாக வெளியிடுவதற்காகவாவது ஏற்பாடு செய்திருக்க வேண்டாமா?

மக்களைக்கூட விட்டுவிடுங்கள், அவர்கள் எல்லாம் புலிகள் ஆதரவாளர்கள் என்று முத்திரை குத்துகிறீர்கள்; இந்த அதிகாரிகள் கருத்தையாவது கேட்க வேண்டாமா?

ராஜபக்சே கூறுகிறார், ஒரு அப்பாவி மக்களைக்கூட கொல்லாத போரை நடத்தினோம் என்று, எங்கள் பக்கம் 6000 பேர் இறந்தால், அவர்கள் பக்கம் 10 மடங்கு அதிகம் என்றார். அப்படியானால், 60000 புலிகள் இறந்திருக்கிறார்கள் என்றார். அவர்கள் பார்வையில், கணக்குப்படி இறந்த தமிழர்கள் அனைவருமே புலிகள்.

இதைப் பற்றி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்துகிறோம். வாழ்ந்தவர்கள், இறந்தவர்கள் பற்றிய கணக்கெடுப்பு வேண்டும். இதையாவது இந்திய அரசு செய்யக் கூடாதா? என்பது தான் நமது கேள்வி? இவர்கள் நிச்சயமாக செய்ய மாட்டார்கள். காரணம் - இந்தப் போர்க் குற்றங்களுக்கு இலங்கையோடு சேர்ந்து துணை நின்றது இந்திய அரசு என்று நாங்கள் குற்றம் சாட்டுகிறோம்.

இந்த நிலையில் இங்கு திரண்டு வந்துள்ள இந்த மக்களாவது ஈழத் தமிழர்களுக்காக எடுக்கப்படும் அறவழிப் போராட்டங்களில் உணர்ச்சியுடன் பங்கு பெறுங்கள். யாராவது போராடட்டும் என்று கருதாமல், ஒவ்வொருவரும் வீதிக்கு வந்து போராட வேண்டும் என்ற போராட்ட உணர்வோடு கலைந்து செல்லுங்கள் என்று வேண்டுகிறோம்.

தமிழக அரசே; ஏராளமான குற்றங்களை செய்து கொண்டிருக்கிற நீ - இந்தக் குற்றத்தையாவது நீதிமன்றம் உன் தலையில் குட்டுவதற்கு முன்னால், இந்த தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைத் திரும்பப் பெறு என்ற வேண்டுகோளை வைத்து முடிக்கிறேன்.

## எழுச்சியுடன் நடந்த கோவை கூட்டம்

ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்க - இந்தியா ஆயுத உதவிகளை இலங்கைக்கு வழங்கி, பயிற்சி நிதியையும் வழங்கியதை சிறீலங்கா அரசே வெளிப்படையாக அறிவித்திருக்கிறது. ஏற்கனவே தமிழகத்தில் இந்தியாவின் ராணுவப் பயிற்சிக்கு வந்த சிங்கள ராணுவத்தினருக்கு எதிர்ப்பு எழுந்ததால் சிங்கள இராணுவம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிலையில் கோவை நீலாம்பூர் நெடுஞ் சாலையில் 80 ராணுவ வாகனங்கள் அணி வகுத்துச் சென்றபோது சிங்கள ராணுவத்துக்கு கொச்சி வழியாக ஆயுதம்அனுப்பப்படுகிறதோ என்ற இயல்பான சந்தேகத்தில் ஈழத் தமிழர் ஆதரவாளர் களும் பொது மக்களும் கொதிப்படைந்து, அந்த வாகனங்களைத் தடுக்க முயன்றனர். அதற்காக 44 தோழர்கள் கைது செய்யப்பட்டு, கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் 25 பேர். இதில் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், பெரம்பலூர் மாவட்ட பெரியார் திராவிடர் கழக அமைப்பாளர் இலட்சுமணன், ம.தி.மு.க. கோவை மாநகர மாணவரணி அமைப்பாளர் புதூர் சந்திரசேகர் ஆகியோர் மீது தி.மு.க. அரசு தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் பிறப்பித்துள்ளது.

ஆதித் தமிழர் பேரவை மற்றும் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தைச் சார்ந்த தோழர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்குகளை வழக்கறிஞர் பாப்பா மோகன் கவனித்து வருகிறார். கோவை இராமகிருட்டிணன் மீதான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து, அவரது துணைவியார் பெயரில் கழக மூத்த வழக்கறிஞர் துரைசாமி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இதே சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள ஏனைய தோழர்களுக்காகவும், உயாநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட இருக்கின்றன. 44 தோழர்களின் வழக்குகளை சந்திக்க பெரியார் திராவிடர் கழகம் மக்களிடம் வழக்கு நிதி திரட்ட முடிவு செய்துள்ளது. இந்த நிலையில் கடந்த 8.6.2009 அன்று கோவையில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சித்தாபுதூர் வி.கே.கே.மேனன் சாலையில் நடந்த பொதுக் கூட்டத்துக்கு மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்திருந்தனர். மேடையைச் சுற்றிய நான்கு புறமும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. எழுச்சியும், உணர்ச்சியுமாய் நடந்த கூட்டத்துக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். வைகோ, தா.பாண்டியன், விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் பாலமுருகன், (பி.யு.சி.எல்.) வழக்குகளை நடத்தி வரும் வழக்கறிஞர் பாப்பா மோகன், திருப்பூர் சு.துரைசாமி (ம.தி.மு.க.), ஆர்.ஆர். மோகன்குமார் (ம.தி.மு.க.) ஆகியோர் பேசினர்.

பெரியார் திராவிடர் கழகமும், ம.தி.மு.க.வும் இணைந்து இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன ஈழத் தமிழர் பாதுகாக்கப்படவேண்டும் என்ற உணர்வில் ஆயுதங்கள் போவதைத் தடுக்க வேண்டும் என்ற ஆத்திரத்தில் தன்னிச்சையாக நடந்த இந்தப் போராட்டத்தை தேசவிரோதமாக அரசு கருதுவது தமிழர்கள் உணர்வுகளை அவமதிப்பதாகும். எனவே, தேசிய பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்து, கைதான தோழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கூட்டத்தில் பேசிய அனைவரும் வலியுறுத்தியபோது மக்கள் கடல் பெரும் கரவொலி எழுப்பி ஆதரித்தது. ம.தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் அர.சற்குணன் நன்றி கூற இரவு 10.10 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.


"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/-

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th June 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஜூன் 18, 2009 புரட்சி 8 முழக்கம் 23 விலை : ரூ.2.50


### ஆயுத வாகனங்களை மறித்தது குற்றம் என்றால்...

## நாடாளுமன்ற அனுமதியே இல்லாமல் இலங்கைக்கு ஆயுதம் வழங்கியது ஏன்?

### கோவை கூட்டத்தில் வைகோ கேள்வி

*ஆயுத வாகனங்களை மறித்ததாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் தோழர்கள் கைது செய்யப் பட்டதைக் கண்டித்து 8.6.2009 அன்று கோவையில் பெரியார் திராவிடர் கழகம், ம.தி.மு.க. நடத்திய மாபெரும் பொதுக் கூட்டத்தில் வைகோ ஆற்றிய உரை:*

உலகெங்கும் பல்வேறு நாடுகளில் துன்பத்திலும் துயரத்திலும் கொந்தளித்துக் கொண்டு இருக்கிற இதயத்தோடு இனி விடியல் எப்போது? இருள் எப்பொழுது விலகும் என்று கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிற தமிழர்கள்; அவர்களின் பார்வை கவனம் ஆறரைக் கோடி தமிழ்மக்கள் வாழுகிற தமிழகத்தின் பக்கம் திரும்பி இருக்கிற நேரத்தில், இனி அடுத்து செய்யவேண்டியது என்ன என்பதை வளரும் இளம் தலை முறையினரிடம் எடுத்துச் சொல்லும்வகையில் அருமைச் சகோதரர் கொளத்தூர் மணி அவர்கள், அரிய பல கருத்துகளை காலத்தின் அருமைகருதி இரத்தினச் சுருக்கமாக கூறி அமர்ந்து இருக்கின்றார்.

விடுதலை இராஜேந்திரன் சிலவினாக்களை எழுப்பினார். பெரியார் திராவிடர் கழகத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான அதனுடைய பொதுச்செயலாளர் சிறைப்பறவை என்று விளிக்கத்தக்க வகையில் அடக்குமுறைக்கு பலமுறை ஆளாகிய கோவை இராமகிருஷ்ணன் அவர்கள்மீது - மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் கோவை மாநகர் மாவட்டம் மாணவர் அணி அமைப்பாளர் அருமைத்தம்பி புதூர் சந்திரசேகர் மீது - பெரம்பலூர் மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் அமைப்பாளர் அருமைச் சகோதரர் லட்சுமணன் அவர்கள்மீது தேசப் பாதுகாப்புச் சட்டம் ஏவப்பட்டு இருக்கிறது. இரண்டு இயக்கங்களையும் சேர்ந்த தோழர்கள் பலர் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இந்த மண்ணின் வழியாக - எங்கள் பூமியின் வழியாக - ஈழத்தில் எங்கள் சொந்த சகோதர, சகோதரி களைக் கொன்று ஒழிப்பதற்கு இனக்கொலையை தீவிரப்படுத்துவதற்கு ஆயுதங்கள் வாகனங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன என்ற செய்தி காட்டுத் தீயாக பரவியபோது, அதைத் தடுக்கவேண்டும் என்ற தன்மானத் தமிழ் உணர்வோடு, அறவழியில் தடுத்து நிறுத்தியதற்கு தேசப்பாதுகாப்புச் சட்டத்தை ஏவி இருக்கிறார் தமிழக முதல் அமைச்சர்.

அந்தச் செய்தி வந்தநேரத்தில் நான் கோவை இராமகிருஷ்ணனிடம் தொலைபேசியில் பேசி னேன். செல்லும் வாகனங்களை நாங்கள் அறவழியில் தடுக்கிறோம் என்று சொன்னார். வன்முறைக்கு துளியளவும் இடம்கொடுக்காத வகையில் நாங்கள் தடுத்து நிறுத்துகிறோம் அறப்போர் நடத்துகிறோம் என்று சொன்னார். தமிழகத்தில் மான உணர்ச்சி செத்துப்போய்விடவில்லை என்பதற்கு அடையாள மான போராட்டம் உங்கள் போராட்டம். வாழ்த்து கிறேன். என் இதயம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

இதில் என்ன தவறு? இனி மேலும் ஆயுதங்களை



ஏந்திக் கொண்டு வாகனங்கள் ஈழத் தமிழ்மக்களைக் கொல்வதற்கு புறப்படுமானால், அதைத்தடுப்போம் - மறிப்போம் - பறிப்போம் என்று நானே சொன்னேன். வழக்கு போடு. இன்னும் சொல்வேன் நான். இந்திய அரசு இங்கிருந்து ஆயுதங்களைத் தந்து ஈழத்தமிழ் மக்களை படுகொலை செய்வதற்கு -

நான் இராஜபக்சேவுக்கு இந்த மண்ணில் இருந்து தெரிவிக்கிறேன். விடுதலைப் புலிகளை ஆதரித்த வர்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்று நீ கொக்கரிக்கிறாய் விடுதலைப் புலிகளை அழித்து விட்டோம் என்று உன் சகோதரர் கொத்தபயா ராஜபக்சே கொக்கரிக்கிறான் - இப்பொழுதுதான் நீங்கள் வினையை விதைத்து இருக்கிறீர்கள் இனிமேல்தான் விபரீதத்தை அறுவடை செய்வீர்கள்.

தமிழகத்தில் உணர்ச்சி செத்துப்போய்விட வில்லை. 14 பேர் தீக்குளித்து மடிந்து இருக்கிறார்கள். வீரத்தியாகி முத்துக்குமார் எடுத்துவைத்த அந்த நெருப்பு 14 வீரத் தமிழ் இளைஞர்கள் தணலுக்கு தங்கள் உயிர்களைத் தந்து இருக்கிறார்கள். அந்த நெருப்பு சுடுகாட்டில் அணைந்து போய் இருக்கலாம். எங்கள் நெஞ்சில் எரிகிறது. தன்மான உணர்வுள்ள வாலிபர்கள் நெஞ்சில் எரிந்து கொண்டு இருக்கிறது.

கொளத்தூர் மணி அவர்கள் குறிப்பிட்டத்தைப் போல, என்றோ நடந்த சம்பவங்கள் 1960, 1970 தொடக்கத்தில் நடைபெற்ற சம்பவங்கள் ஆயுதப் போராட்டத்துக்கு ஈழத்து இளம் பிள்ளைகளை கொண்டுவந்து நிறுத்தியது. புதிய புலிகள் தமிழ் ஈழ விடுதலை புலிகளானார்கள். அதைவிட ஆயிரம் மடங்கு கொடுமை இப்பொழுது நடத்தப்பட்டு இருக்கிறது. இதைத்தமிழக மக்கள் மனதில் விதைக்கவேண்டிய கடமை நமக்கு உண்டு.

அப்படியானால் இந்தத் தேசத்தின் பாதுகாப்புக்கு எதிராக வாகனங்களைக் குறுக்கே மறித்தது சரிதானா? என்று சிலமேதாவிகள் கேட்கலாம். ஈழத்தமிழ் மக்களைப் படுகொலை செய்வதற்கு இந்திய அரசு ஆயுதம் அனுப்பியது - ராடார் கொடுத்தது - தமிழர்களைக் கொலைசெய்வதற்கு மத்திய அரசுக்கு தமிழ்நாட்டு மக்கள் வாக்களித்து அவர்களுக்கு ஆதரவு தந்தார்களா? யார் அந்த அனுமதியைக் கொடுத்தது? நாடாளுமன்றத்தில் அதற்குரிய அனுமதி கிடைத்ததா?

1998 ஆம் ஆண்டு அடல்பிகாரி வாஜ்பாய் தலைமை அமைச்சராக இருக்கிறபோது ஈழத்தில் தமிழர்கள் இரத்தம் ஓடுகிறது. படுகொலை செய்யப்படுகிறார்கள் என்ற குரல் வேதனைக் குரலாக எழுந்தபோது அவர் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத் தில் எடுக்கப்பட்ட முடிவு ஆயுதங்கள் தருவதில்லை ஆயுதங்கள் விற்பதில்லை என்று ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவு.

இலங்கை அரசுக்கு இவ்வளவு ஆயுதங்களையும் கொடுத்ததற்குப்பிறகு இந்த யுத்தத்தை இந்திய அரசு நடத்தியது. இந்திய அரசின் துரோகத்தை நாங்கள் மக்கள் மன்றத்தில் சொன்னோம். இன்றைக்கு நாதியற்றுப் போய்விட்டார்கள் தமிழர்கள் என்ற நிலையை உருவாக்குகிறார்கள். நாங்கள் பாதுகாப் புக்கு விரோதமானவர்கள் அல்ல. இந்தியாவின் பாதுகாப்புக்கு இராமகிருஷ்ணன் விரோதமானவர் அல்ல - இலட்சும ணனோ, சந்திரசேகரோ இந்தியா வின் பாதுகாப்புக்கு விரோதமானவர்கள் அல்ல. இந்த அடக்குமுறைக்கு அவர்கள் பயப்படுகிறவர்களும் அல்ல.

மூன்றரை ஆண்டுகள் தடா கைதியாக சிறையில் அடக்குமுறையை ஏற்றவர்தான் கோவை இராம கிருஷ்ணன். இந்த மேடையில் கூட்டத்துக்கு தலைமை தாங்குகின்ற சகோதரர் கொளத்தூர் மணி எண்ணற்றமுறை சிறைக்கு சென்றவர்தான். பாது காப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு இப் பொழுதுதான் விடுதலை ஆகிவந்திருக்கிறார். எங்களாலா இந்த நாட்டுக்கு ஆபத்து? இந்த நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்து? கிடையாது.

இந்தநாட்டின் பாதுகாப்புக்கு கேடுவிளைவித்தது மன்மோகன் சிங் அரசு. 1965 மொழிப் போராட் டத்தை இராஜேந்திரன் நினைவூட்டினார். 1967 இல் அண்ணா முதல்வரானார். மீண்டும் கிளர்ச்சி வெடித்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் வலுத்தது. இரயில் பெட்டிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. வன்முறை பரவி விட்டது என்று காங்கிர காரர்கள் கூச்சலிட்டனர். சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பப் பட்டது. இத்தனை இரயில்பெட்டிகளை மாணவர்கள் தீயிட்டுக் கொளுத்தி இருக்கிறார்களே இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது? ஏன் நீங்கள் காவல் துறையைப் பயன்படுத்தவில்லை? எதற்கு உங்களுக்கு அரசாங்கம் எதற்கு உங்களுக்கு அதிகாரம் என்று கேட்டார்கள்.

அதற்கு அண்ணா அவர்கள் சொன்னார்கள் முதலமைச்சராக நான்கு இரயில் பெட்டிகளைக்

(4 ஆம் பக்கம்)

# பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் பேட்டி

# ஈழப் போராட்டம் ஓய்ந்துவிடாது

ஈழ விடுதலைப் போராட்டம் ஓயாது; மீண்டும் புலிகள் உருவாகுவார்கள் என்று கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், 'நக்கீரன்' இதழுக்கு (ஜூன் 17) அளித்த பேட்டியில் கூறியுள்ளார். பேட்டி விவரம்:

ராணுவ லாரிகள் மீதான தாக்குதலுக்குப் பிறகு பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ஈழத்தில் தமிழினம் ஒரு பேரழிவிற்கு உட்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கும் நிலையில் சிறையில் இருக்கும் கு.இராமகிருட்டிணனின் மனவோட்டங்களை அறிய அவரது வழக்கறிஞர் மூலம் நம் கேள்விகளை வைத்தோம்.

**ராணுவ வண்டிகள் மீதான தாக்குதலினால் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் அடைக்கப் பட்டிருக்கும் நீங்கள் சிறை வாழ்க்கையை எப்படி பார்க்கிறீர்கள்?**

ராணுவ லாரிகள் மீதான தாக்குதலையடுத்து தேசிய பாதுகாப்புச் சட்டம் என்கிற ஆடையை எனக்கான அளவுகளால் சிரத்தையெடுத்து எனக்கு அணிவித்திருக்கிறது அரசாங்கம். தேசிய பாதுகாப்பு சட்டத்தில் அடைக்கப்படுபவர்களுக்கு ஓராண்டு கட்டாயச் சிறை என்று மிரட்டுகிறது இந்த ஆடை. ஆனால் 1985 ஆம் ஆண்டே நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் போது மிசா என்ற ஆடையால் ஓராண்டு சிறையில் இருந்தேன்.

பின் மூன்றரை ஆண்டுகள் தடா என்ற ஆடையை சிறைச்சாலை எனக்கு அணிவித்தது. அதற்குப் பின் என் இளமைக் காலம் தொட்டு 30 முறை வெவ்வேறு ஆடைகளை சிறைச்சாலைகள் எனக்கு அணிவித் திருக்கின்றன. இப்போது ஈழத்தில் செத்துக் கொண் டிருக்கும் என் தாய்த் தமிழ் உறவுகளுக்காய் போரா டியதற்காக என் மீது அணிவிக்கப்பட்டிருக்கும் இந்த ஆடை என்னைப் பொறுத்தவரை நைந்து போன ஒரு பழைய துணிதான்.

**விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாக செய்தி வெளியான நாளில் சிறைக்குள்ளிருந்த உங்களின் மனோ நிலை?**

தம்பி பிரபாகரன் கொல்லப்பட்டார், 25 ஆயிரம் தமிழர்கள் கொலை செய்யப்பட்டார்கள். முக்கியத் தளபதிகளும் கொல்லப்பட்டார்கள் என்று செய்தி கிடைத்த நேரம். அய்யோ.... தம்பின்னு அழறதா? இல்ல...என் அம்மா... என் அப்பா... என் தங்கச்சின்னு மொத்த பேரையும் கொன்னுட்டாங்களே... அதுக்காக அழறதா? முப்பது ஆண்டு காலம் பாடுபட்ட தமிழீழம் வீட்டு வாசல் வரை வந்து கைகூடாம போயிருச்சேன்னு அழறதா?

என் தாயார் தடாவில் நான் சிறையில் அடைக்கப் பட்டிருந்தபோது இறந்துபோனார். அப்போதுகூட கன்னம் வரைக்குமே வழிந்த கண்ணீர் பிரபாகரன் இறந்துவிட்டதாக சொல்லப்பட்ட போது என்னுடைய கட்டுகளை எல்லாம் அடித்து துவம்சம் செய்து கொண்டு வெளியேறிக் கொண்டிருந்தது. என்னோடு கைது செய்யப்பட்டிருந்த அனைத்து தோழர்களும் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார்கள்.

அன்றைய நாளில் என்னைப் பார்க்க சிறைக்கு வந்திருந்த வைகோ... 'தம்பி நல்லாயிருக்கறார். கவலைப்படாதீங்க...' என்று நம்பிக்கையூட்டினார். ஆனாலும் தொடர்ந்து தம்பி இறந்துவிட்டார் என்ற பத்திரிகைகளின் பரப்புரைக்கிடையே பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று நக்கீரன் வெளியிட்ட செய்தி மேலும் எங்களை தெம்பூட்டியது என்பது நிஜம்.

ஒரு பொய்யான செய்தியை தாங்கிக் கொண்டு வந்து ஒட்டு மொத்த தமிழினத்தையும் மார்பிலும் தலையிலும் அடித்துக் கொண்டு அழச் செய்த அந்த



நாளை நான் மறக்கவே விரும்புகிறேன்.

**ஈழத்தில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டதாக கூறப்படும் சூழலில் எஞ்சியிருக்கும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்குவோம் என்று இலங்கை அரசு சொல்வது சாத்தியமா?**

கடலை ஒரு கையால் அள்ளி உங்கள் கைகளில் தருவேன் என்று யாரேனும் சொன்னால் நீங்கள் நம்புவீர்களேயானால் நிச்சயம் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்பது சாத்தியம் தான். இங்கே ஒரு விஷயத்தை சொல்லியாக வேண்டும். தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும் என்று சொல்பவர்களும், வழங்கப்படும் என்று சொல்பவர்களும் எந்தெந்த துறைகளில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும் என்றோ, வழங்கப்படும் என்றோ சொல்லவே யில்லையே?

இதைவிட இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் இணைய தளத்தில் ஒரு உண்மையை சொல்லியிருக்கிறானாம் கோத்தபாய ராஜபக்சேவின் நண்பனும், எழுத்தாளனுமான ஜெயசூர்ய.

தமிழர்களுக்கு நாங்கள் எதற்கு அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும்? இந்த விஷயத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா உட்பட இந்தியாவில் உள்ள யாரும் எங்களுக்கு புத்திமதி சொல்ல வேண்டிய தேவையில்லை என்று கோபம் தெறித்திருக்கிறான். போதுமா அதிகாரப் பகிர்வின் இலட்சணம்?

அதே போல தமிழர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படும் - என்பது உண்மையானால் ராஜ பக்சேவின் கையிலிருந்து நலத்திட்டங்கள் எதையும் எம் தமிழர்களுக்கு கொடுக்கக் கூடாது.

ஐ.நா.வும் செஞ்சிலுவைச் சங்கமும்தான் எம் மக்களுக்கு உதவ வேண்டும். அப்பாவைக் கொன்றவன் பிள்ளைகளுக்குப் பாலும் கொடுப்பதை உண்டு உயிர் வாழுமளவுக்கு இன்னும் மானங் கெட்டுப் போய்விடவில்லை தமிழினம்.

**உண்மையைச் சொல்லுங்கள். விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்து விட்டோம் என்று இலங்கை அரசு சொல்கிறது. அப்படியானால் ஈழப் போராட்டம் முடிவடைந்து விட்டதா?**

இந்த மாபெரும் மனிதப் பேரழிவுக்குப் பின்னும் நான்கு இலட்சம் எண்ணிக்கைக்கு மேல் அங்கே குத்துயிரும் குலையுயிருமாக நடமாடிக் கொண் டிருக்கிறது கேட்பாரின்றிப் போன தமிழினம்.

இனி எம் தாய்மார்களின் "கற்பு" எக்காளத்தோடு சிங்களர்கள் சந்தையில் விலை பேசப்படும். என் தமிழ் இளைஞர்கள் அடிக்கடி காணாமல் போய் ஏதேனும் ஒரு காட்டுப் பகுதியிலோ, நீரிலோ அவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்படலாம். இளம் பெண்களின் வீடுகளெல்லாம் சிங்களர்களின் அந்தப்புரம் என்ற பதாகைகளை தாங்கி நிற்கும்.

தமிழ்ப் பெண்களைத் தனதாக்கிக் கொண்டு இனத்தையே கலப்பினமாக்கி விடத் துடிப்பார்கள் சிங்களர்கள். இந்தக் கொடுமைகள் ஏற்கனவே பலமுறை நிகழ்ந்ததின் விளைவே அம்மக்களிலிருந்து புலிகள் உருவானார்கள். **இப்போதும் உருவா வார்கள்.**

ராஜபக்சே, கோத்தபாய, பொன்சேகா சொல்வது போல் 'புலிகளை முற்றாக ஒழித்து விட்டோம்' என்பது உண்மையானால் மேலும் ஒரு இலட்சம் இளைஞர்களை தங்கள் நாட்டு இராணுவத்திற்கு சேர்க்க வேண்டியதின் அவசியம் என்ன? அவர்கள் இப்போதுதான் பயமென்னும் பாயில் விழுந்து விட்டு தூங்குவது போல் நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## 51 நாள் சிறைவாசத்துக்குப் பின் இராம. இளங்கோவன் விடுதலை



23.4.2009 அன்று கோபியில் தமது இல்லத்தில், ஈழத் தமிழர்கள் குறித்த குறுந்தகடுகள் வைத் திருந்ததாகக் கைது செய்யப்பட்ட ஈரோடு மாவட்டக் கழகச் செயலாளர் இராம.இளங்கோவன் 51 நாள்கள் சிறைவாசத்திற்குப் பின், கோவை மத்திய சிறையி லிருந்து 13.6.2009 அன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

சத்திய மங்கலம் குற்றவியல் நீதிமன்றம், ஈரோடு மாவட்ட முதன்மை நீதிமன்றம் ஆகியவற்றில் பிணை மறுக்கப்பட்டதால், சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் கோடை கால சிறப்பு நீதிமன்றமும் பிணை வழங்க மறுத்த நிலையில், கோடை விடுமுறைக்குப் பின் தொடர்ந்த வழக்கு விசாரணையில் நீதிபதி இரகுபதி, கடந்த 10.6.2009 அன்று தலா பத்தாயிரம் ரூபாய்க்கு இரு நபர் ஜாமீனில் பிணை வழங்கப்பட்டது.

13 ஆம் தேதி கோவை மத்திய சிறையிலிருந்து விடுதலையான இராம. இளங்கோவனுக்கு சிறை வாயிலில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பத்துக்கும் மேற்பட்ட வாகனங்களில் ஊர்வலமாகச்சென்று, கோவை - காந்திபுரத்தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. படிப்பகத்தில் தோழர்களுக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. கோவை மாநகரச் செயலர் கோபால், வழக்குரைஞர்கள் சாஜித், பன்னீர்செல்வம் மற்றும் தோழர்கள் பாண்டியன் ,ஜெகன் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர். கோவையிலிருந்து கோபி வரை - வழிநெடுக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# ஒரு சார்பு சுதந்திர பிரகடனம்: சில வரலாற்று தகவல்கள்

***ஒரு சார்பாக – தமிழ் ஈழ விடுதலை அரசு பிரகடனம் செய்வதற்கு சட்ட அறிஞர் விசுவநாதன் உருத்திரகுமார் தலைமையில் செயல்திட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக – அனைத்துலக உறவுகளுக்கான செயலகத்தின் பொறுப்பாளர் செல்வராசா பத்மநாபா அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்தக் கருத்து – விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிகார பூர்வமானதா என்பது பற்றிய தகவல்கள் இல்லை என்றாலும் இத்தகைய ஒரு சார்பு சுதந்திரப் பிரகடனங்கள் வரலாற்றில் விடுதலைக்கு முன் நிகழ்ந் துள்ளன. அது பற்றிய சில வரலாற்றுத் தகவல்கள்:***

ஐ.நா. தோன்றுவதற்கு முன் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தலைபட்சமான சுதந்திரப் பிரகடனங்கள்.

**ஸ்காட்லாந்து :** 1320 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசரான முதலாம் எட்வர்ட்டின் நீதியற்ற தாக்குதல்களி லிருந்து தற்காத்துக் கொள்ள ஸ்காட் லாந்து சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டது. அந்தப் பிரகட னத்தைத் தொடர்ந்து இரு நாடு களிடையே அப்போதைய 22 ஆம் பாப்பரசர் ஜோன் அனுசரணை யாளராக செயற்பட்டு பேச்சுவாத்தை நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஸ்காட்லாந்தின் மீதான பிரித்தானியாவின் உரிமை கோரல்கள் கைவிடப்பட்டு 1328 ஆம் ஆண்டு பிரித்தானிய பேரரசர் மூன்றாம் எட்வர்டினால் ஏற்கப்பட்டது.

**லத்தின் அமெரிக்க நாடுகளின் சுதந்திரப் பிரகடனங்கள் :** 1800 களின் தொடக்கத்தில் பிரெஞ்சு புரட்சி மற்றும் அமெரிக்க புரட்சிக் கான யுத்தங்கள் லத்தீன் அமெரிக்க நாடுகளில் விடுதலைச் சிந்தனைக்கு வித்திட்டன.

1810 மே 25 ஆம் நாளன்று ஸ்பெயி னின் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிரெஞ்சு படையணிகள், இராணுவ அதிகாரிகளைக் கொண்ட அரசாங் கத்தை அமைத்தது. அதனுடன் இணைந்து கொள்ளுமாறு இதர ஸ்பெயின் காலனி நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தது.

அப்போதைய ஸ்பெயின் காலனி நாடுகளாக லத்தீன் அமெரிக்க நாடுகள் இருந்தன. பிரெஞ்சினது கோரிக்கையை நிராகரித்த பராகுவே 1811 ஆம் ஆண்டு “ஒருதலைபட்ச சுதந்திரப் பிரகடனத்தை” அறிவித்தது.

1816 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் நாளன்று அர்ஜெண்டினா சுதந்திரப் பிரகடனம் வெளியிட்டது. அர்ஜெண் டினாவின் சுதந்திரப் பிரகடனத்தை 9 ஆண்டுகள் கழித்து 1825 ஆம் ஆண்டு பிரித்தானியா அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்தது.

1822 ஆம் ஆண்டு போர்ச்சுகலின் ஆதிக்கத்திலிருந்த பிரேசில் தனது சுதந்திரப் பிரகடனத்தை வெளி யிட்டது.

1825 ஆம் ஆண்டு பொலிவியா தனது சுதந்திரப் பிரகடனத்தை தானே அறிவித்தது.

1828 ஆம் ஆண்டு அர்ஜென்டினா - பிரேசில் யுத்தத்துக்குப் பின்னர் ஊருகுவேயும் தன்னை சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தது.

**மத்திய அமெரிக்க நாடுகள் :** ஐக்கிய அமெரிக்க நாடுகள் உரு வானதைத் தொடர்ந்து 1823 ஆம் ஆண்டு மத்திய அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப் பட்டது. இக்கூட்டமைப்பில் கோஸ்டா, ரிக்கா, எல் சல்வடோர், கௌதமாலா, ஹோண்டுராஸ், நிக்கரகுவா ஆகிய நாடுகள் உறுப்பு நாடுகளாக இருந்தன. ஆனால் இக்கூட்டமைப்பிலிருந்து,

1838 ஆம் ஆண்டில் நிக்கரகுவா தானே பிரிந்து செல்வதாக அறி வித்தது.

அதனைத் தொடர்ந்து ஹோண்டு ராஸ் மற்றும் கோஸ்ரா, ரிக்கா ஆகிய நாடுகளும் பிரிந்து சென்றன.

இதனால் மத்திய அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பு 1840 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.

எல்சவடோவர் நாடு தன்னை தானே சுதந்திர நாடாக 1841 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அறிவித்துக் கொண்டது.

**எஸ்தோனியா:** எஸ்தோனியா தேசிய இன மக்கள் வரலாறு நெடுகிலும் தங்களது சுய நிர்ணய உரிமையை மாறி மாறி அமைந்த வரலாற்றுப் பேரரசுகளிடம் இழந் திருந்தனர். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ருசியப் பேரரசின் ஆதிக்கத்தில் அடிமைப்பட்டு இருந்தது எஸ்தோனியா. 1917 ஆம் ஆண்டு ரசியப் புரட்சி நடந்தது. அதன் பின்னர் ருசிய இராணுவத்துக்கு எதிராக ஜெர்மன் வெற்றி பெற்ற நிலையில் எஸ்தோனியாவின் மூத்த குடிமக்கள் “எஸ்தோனியா சுதந்திரப் பிரகடனத்தை 1928 ஆம் ஆண்டு பிப்ரவரி24 ஆம் நாள் வெளியிட்டனர். அந்தப் பிரகடனம் “எஸ்தோனியா” தேயி இனத்தின் சுய நிர்ணய உரிமையை உலகுக்கு அறிவித்தது. சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்ட பின்னர், சுதந்திரத்தக்கான போரை 2 ஆண்டுகாலம் எஸ்தோனியா நடத்தி யது. 1920 ஆம் ஆண்டு ருசியாவுக்கு எதிரான எஸ்தோனியாவின் யுத்தம் வெற்றியடைந்தது. எஸ்தோனியாவின் இந்த சுதந்திர வரலாறு நீடித்ததாக இல்லை. 1940 ஆம் ஆண்டு சோவியத் ருசியாவால் ஆக்கிரமிக்கப்பட்டது. 1990களின் இறுதியில் சோவியத் ருசியா உடைந்து நொறுக்கியபோது தனது சுதந்திர காற்றை எஸ்தோனியா சுவாசித்தது. இருப்பினும் 1918 ஆம் ஆண்டு எஸ்தோனியா வெளியிட்ட “ஒருதலைபட்ச சுதந்திரப் பிரகடனம் தான்” அந்நாட்டின் வரலாற்றில் சுதந்திர பிரகடன ஆவணமாக இடம் பெற்றுள்ளது.

**பின்லாந்து:** எஸ்தோனியாவைப் போலவே 1917 ஆம் ஆண்டு ருசியப் புரட்சியைத் தொடர்ந்து பின்லாந்தும் தனது சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டது. 1917 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் நாளன்று பின்லாந்தின் நாடாளுமன்றம் பின்லாந்தின் சுதந்திரப் பிரகடனத்தை அறிவித்தது. அப்பிரகடனத்தை சோவியத்தின் உயர் நிர்வாக அமைப்பும் ஜெர்மனியும் ஸ்காண்டிநேவியன் நாடுகளும் டிசம்பர் 22 ஆம் நாளே அங்கீகரித்தன.

**கினியா பிசாவு :** மேற்கு ஆப்பிரிக்காவில் போர்த்துகீசிய காலனி நாடாக இருந்தது கினியா பிசாவு என்கிற நாடு. இதன் மொத்த மக்கள் தொகை 14 இலட்சம் பேர்தான். போர்த்துகீசியர்களின் அடிமை வர்த்தகத்துக்கான நாடாக இருந்த அந்நாட்டில் 1956 ஆம் ஆண்டு முதல் சுதந்திரத்துக்கான ஆயுத போராட்டக் குழு உருவானது. அந்நாட்டின் சுதந்திரப் போருக்கு கியூபா உதவியது.

1973 ஆம் ஆண்டு விடுதலைக்காகப் போராடிய ஆயுதக் குழுவின் கட்டுப் பாட்டில் அந்நாட்டின் பெரும் பகுதிகள் வந்தன.

அதனைத் தொடர்ந்து 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாள் ஒருதலைபட்சமான சுதந்திரப் பிர கடனத்தை அந்நாடு வெளியிட்டது.

1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் 93க்கு 7 என்ற வாக்குகளில் அந்நாட்டின் சுதந்திரப் பிரகடனம் அங்கீகரிக்கப் பட்டது.

**ஹைட்டி:** பிரெஞ்சு காலனியின் கீழ் இருந்த ஹைட்டியானது 1805 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் நாளன்று தனது சுதந்திரப் பிரகடனத்தை தானே வெளியிட்டது. லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே முதலாவது நாடாக சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தது ஹைட்டி.

ஆனால், 1915 ஆம் ஆண்டு முதல் 1934 ஆம் ஆண்டு வரை சுதந்திர நாடாக இருந்த ஹைட்டியை ஆக்கிரமித்து அரசாட்சி செய்தது அமெரிக்கா. அதன் பின்னர் சுதந்திர நாடாக இயங்கி வருகிறது.

**அமெரிக்கா :** 1776 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் நாளன்று அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தை வெளி யிட்டது. வடஅமெரிக்காவில் பிரிட் டனுடன் அரசியல் தொடர்புகளை வைத்திருந்த 13 காலனி நாடுகளை ஒருங்கிணைந்து சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்டது. அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்திற்கு இடப் பட்டிருந்த தலைப்பு “13 ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஒருமித்த பிரகடனம்” என்பதாகும்.

இன்றளவும் அந்த ஜூலை 4 தான் அமெரிக்காவின் சுதந்திர நாளாக கடைபிடிக்கப்படுகிறது. அந்த சுதந்திர நாள் பிரகடனத்தை உருவாக்கிய வர்கள், தோமஸ் ஜெப்பர்சன், ஜோன் ஆதம்ஸ், பெஞ்சமின் பிராங்களின் ஆகியோராவர்.

**இந்தோனேசியா :** இந்தோனேசி யாவை நெதர்லாந்து ஆக்கிரமித்து, அங்கே தனது காலனி நாடாக டச்சு நாட்டை ஏற்படுத்தியது. 20 ஆம் நூற்றாண்டில் இந்தோனேசியாவுக் குள் ஜப்பான் அத்துமீறி நுழைந்து கைப்பற்றியது. அதனைத் தொடர்ந்து டச்சு ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் சரணடைந்த இரண்டே நாள்களில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்தோனேசியாவின் தேசிய வாதத் தலைவர் சுகர்னோ பிரகடனத்தை அறிவித்து அரச தலைவரானார்.

அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடன பாணியில் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

இதே காலகட்டத்தில் நெதர் லாந்து மீண்டும் இந்தோனேசியாவை ஆக்கிரமிக்க முயற்சித்தது. இதனால் ஆயுத மற்றும் இராஜதந்திர மோதல் கள் ஏற்பட்டன. இது 1949 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. இந்தோ னேசியாவின் சுதந்திரப் பிரகடனத்தை நெதர்லாந்து அங்கீகரித்தது.

**(அடுத்த இதழில்)**

## சுற்றுச் சூழலை பாழ் செய்யும் ‘மால்கோ’வுக்கு அவமானப் பரிசு

மேட்டூரில் ‘மால்கோ’ இரசாயன தொழிற்சாலையால் சுற்றுச்சூழல் மிக மோசமாக பாதிக்கப்பட்டு வருகிறது. இதை எதிர்த்து, தொடர்ச்சியாக பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட அமைப்புகள் போராடி வரு கின்றன. கடந்த 13.6.2009 சனி காலை 11 மணியளவில் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் கண்டன ஊர் வலம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது. பெரியார் திராவிடர் கழகம், ‘சேலமே! குரல் கொடு!’ சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இந்தக் கண்டனப் பேரணியின் இறுதியில் மால்கோ வேதாந்த குழுமத்துக்கு அவமானப் பரிசு என்று அறிவித்து மரத்தால் செய்யப்பட்ட கட்டை மயில் ஒன்று நிர்வாகத்திடம் வழங்கப் பட்டது.

## விடுதலை செய்யக் கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம்

தேர்தல் வழக்குகளிலும் தேசியப் பாதுகாப்பு சட்டத்திலும் கைது செய்யப்பட்டோரை தமிழக அரசு நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என்று கோவை யில் கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தீர்மானம்:

தமிழ்நாட்டில் மக்களின் கோரிக்கைகளுக்காகவும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதர வாகக் குரல் எழுப்புகிறவர்கள், எழுதுகோல் இயக்கம் நடத்து வோர் மீதும், தேர்தல் காலத்தில் விதி மீறல்கள், பணப் பட்டுவாடா ஆகியவற்றைக் கண்டித்த பலர் மீதும் பொய்யான வழக்குகள் பல தொடரப்பட்டிருப்பது போல் தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் பலர் தொடர்ந்து கைது செய்யப்பட்டுச் சிறையில் வாடுகிற நிலை வேதனையைத் தருகிறது.

தமிழ்நாடு அரசு, தேசப் பாது காப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளோரையும், தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சியினரை ஒடுக்கத் தொடரப்பட்ட வழக்கு களையும் ரத்துச் செய்திட வேண் டும் என்றும், தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதாகிச் சிறை யில் அடைக்கப்பட்டுள்ளோரை யும் உடனே நிபந்தனையின்றி விடு விக்க வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு கேட்டுக் கொள்கிறது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 2451 2857

**தமிழர்களே!**
**ஒடுக்குமுறை வழக்குகளை சந்திக்க நிதி குவிப்பீர்!**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஒப்பந்தம் போடாமலே இந்தியா செய்த ராணுவ உதவி

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கொளுத்தினால் திரும்ப நான்கு இரயில் பெட்டிகளைத் தயாரிக்க முடியும். ஒரு மாணவன் உயிர்போய்விட்டால் அவனது உயிரை திரும்பக்கொடுக்க முடியாது என்றார். இருதயத்தில் ஏற்படுகிறவேதனை அங்கே பச்சிளம் குழந்தை களும் கொல்லப்படுகிறார்கள் - நமது சகோதரிகள் கொல்லப்படுகிறார்கள் - தமிழர்கள் கொத்துக் கொத்தாக செத்து மடிகிறார்கள்.

இந்திய அரசின் ஆயுதங்கள் போகின்ற காரணத்தினால் தமிழர்கள் கொல்லப்படு கிறார்கள் என்ற செய்தி பரவிய காரணத்தினால் தடுக்கின்ற உணர்வு வராதா? ஆயுதத்தோடு ஒருவன் வருகிறான் பச்சிளம் குழந்தைகளையும் தாய்மார்களையும் கொல்வதற்கு ஒருவன் வருகிறவனைத் தடுக்க நினைப்பதுதான் மனிதநேயம். தடுக்கின்ற முயற்சியில் ஈடுபடும்போது அது எல்லைமீறிக்கூடப் போகலாம்.

இந்த உணர்வில்தானே இராமகிருஷ்ணனும் தோழர்களும் இந்த கோவை மாநகரத்து வீதிகளில் திரண்டார்கள். அவர்களை சிறையில் நீங்கள் வைத்து இருக்கலாம். உலகம் முழுவதும் இருக்கிற தமிழர்கள் கோடிக்கணக்கான தமிழர்கள் தரணி எங்கும் பல கண்டங்களில் சிதறிக்கிடக்கின்ற தமிழர்கள் அந்த ஒருசெய்தி வந்தவுடன் கோயம்புத்தூரில் ஆயுதங்கள் ஏற்றிச்செல்கின்ற இராணுவவண்டிகளைத் தமிழர்கள் தடுத்தார்கள் என்ற ஒருசெய்தி இந்தத் தமிழனின் தன்மானத்தைத் தரணியில் தாய்த் தமிழகத்தில் தன்மானம் செத்துவிடவில்லை என்ற உணர்வை உண்டாக்கிக் காட்டியது.

இந்திய அரசு நடந்து முடிந்திருக்கிற படுகொலைகளுக்கு முழுமுதல் காரணம் என்று நாங்கள் குற்றம் சாட்டுகின்றோம். ஐ.நா. மன்றத்தில் தீர்மானத்தை முன்மொழிய வேண்டிய இந்திய அரசு இலங்கைக்கு ஆதரவாக செயல்பட்டு அந்தத் தீர்மானத்தை வெற்றிபெற வைத்தது என்ற செய்தியை இங்கே குறிப்பிட்டார்கள். ஏனென்றால் இந்த யுத்தத்தை நடத்திய குற்றவாளி இந்திய அரசு. ஆதாரம் இல்லாமல் நான் எதுவும் பேசவில்லை. அவசரப்பட்டு நான் எதையும் பேசவில்லை.

இது ஒரு முக்கியமான கூட்டம் நாங்கள் தேர்தலுக்காகவும் பதவிகளுக்காகவும் கட்சி நடத்துகிறவர்கள் அல்ல. பேரறிஞர் அண்ணா சொன்னதைப்போல அதை ஒரு கருவியாகப் பயன்படுத்துவோம். அதை பயன்படுத்தாவிடில் என் சகோதரர் கணேச மூர்த்தி நாடாளுமன்றத்துக்குச் சென்றார். இன்று பேசியிருக்கிறார் அவருக்குக் கிடைத்த குறைந்த நேரத்தில் - இந்திய அரசுதான் ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்தது என்று குற்றம்சாட்டி இருக்கிறார்.

சோனியா காந்தி காங்கிரசு கட்சிக்குத் தலைமை தாங்குகிறார். காங்கிரசு தோற்கடிக்கப் பட்ட கோவையில் நின்றுநான் பேசுகிறேன். 1991 ஆம் ஆண்டு நரசிம்மராவ் ஆட்சியில் இருந்தபோது சோனியாகாந்தியின் திட்டம் நிறைவேறவில்லை. இந்தக் காங்கிரசு கட்சிக்குத் தலைமை தாங்கி வழிகாட்டுகின்ற தகுதி அவருக்குக் கிடையாது என்று இன்று மண்டியிட்டுக் கொண்டிருக்கிற சங்மா அன்று சொன்னார். இன்று சலுகைக்குக் காத்துக்கிடக்கின்ற சரத்பவார் சொன்னார் - கோபித்துக் கொண்டு கதவை ஓங்கி அடித்துவிட்டு வீட்டுக்குச் சென்றார் சோனியாகாந்தி. சீதாராம் கேசரி பின்னாலே சென்று கெஞ்சினார் மன்றாடினார்.

அதன்பிறகு ஐந்து ஆண்டுகள் கழிந்தன அடுத்தத் தேர்தலில் தேவகௌடா பிரதமரானார். காங்கிர ஆதரவு கொடுத்தது. அவர் நினைத்ததை நடத்தக்கூடிய இடத்தில் இல்லை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அரசில் பங்கெடுத்தது. ஒருவரி அதுவும்கூட நேரடிக் குற்றச்சாட்டல்ல ஜெயின்கமிஷன் அறிக்கை. சந்தேகத்தை எழுப்புகின்ற ஒருவாக்கியம் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அமைச்சரவையில் நீடிக்குமானால் காங்கிரசு ஆதரவுதராது என்று காங்கிரசு கட்சி அறிவித்தது. சோனியா காந்தி அறிவிக்கச் செய்தார். அந்த அரசு கவிழ்ந்தது. தி.மு.க. மீது அவ்வளவு ஆத்திரம் இருந்தது அல்லவா சோனியா காந்திக்கு.

அதன்பிறகுதான் 1998 ஆம் ஆண்டில் வாஜ்பாய் பிரதமரானார். மீண்டும் 1999 ஆம் ஆண்டு அதே வாஜ்பாய் மீண்டும் பிரதமராக தேர்ந்து எடுக்கப்பட்டு 5 ஆண்டுகள் அவர் ஆட்சி நடத்தியபோது மிக சாதுர்யமாக ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டார். 2003 ஆம் ஆண்டு இறுதியில் 2004 ஆம் ஆண்டு தொடக்கத்தில் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்துடனே கூட்டணி அமைப்பது என்ற முடிவுக்கு வந்தார்.

துரதிருஷ்டவசமாக அந்தக் கூட்டணியில் இணைய வேண்டிய துர்பாக்கியத்துக்கு நாங்களும் ஆளானோம். ஆனால், அமைச்சர் அவையில் சேர்வதில்லை என்று முடிவெடுத்தோம். எந்த அழுத்தம் கொடுத்தாலும் சரி நாங்கள் மந்திரி சபையில் சேர்வதில்லை என்று முடிவெடுத்தோம்.

தமிழ்நாட்டில் தமிழ் இனத்தின் தலைவர் என்று தனக்குத்தானே மகுடம் சூட்டிக் கொண்ட கருணாநிதி, சோனியா காந்தி அம்மையாருடைய சலுகைகளை எதிர்பார்க் கின்ற இடத்துக்கு வந்தார். மந்திரி சபையில் அவர் கேட்ட இலாக்காக்கள் கிடைத்தது. சோனியா காந்தியைப் பொறுத்தவரை மிகசாதுர்யமாக திட்டமிட்டார். நாம் எது செய்தாலும் கருணாநிதி தமிழ்நாட்டை பொறுத்தவரையில் எதிர்க்கப் போவதில்லை இதுதான் தமிழர்களின் வரலாற்றில் நேர்ந்த மிகப்பெரிய அழிவுக்கான காரணங்களில் ஒன்றாகும்.

எடுத்த எடுப்பிலேயே இலங்கையோடு இராணுவ ஒப்பந்தம்போட திட்டமிட்டார். அதுமுதலில் நமக்குத் தெரியாமற்போயிற்று. எதிர்ப்புக் காட்டினோம். நேரடியாகச் சந்தித்தோம். சோனியாகாந்தியிடமே கேட்டேன் எனக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாதுஎன்றார் இன்றைக்கு தமிழர்களின் இரத்தத்தில் குளித்துவிட்டு கொக்கரித்து கொண்டு இருக்கின்ற ராஜபக்சே இலங்கை பிரதமராக வந்தான் தில்லிக்கு. இந்தியா - இலங்கை இராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகப் போகிறது இலங்கை அதிபர் சந்திரிகா வருகிறார் கையெழுத்தாகும் என்றார்.

நான் பதறி அடித்துக் கொண்டு ஓடி மன்மோகன் சிங்கிடம் கேட்டேன். அப்படி ஒன்றும் நடக்காது என்றார். சந்திரிகா வந்தார் இராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகப் போகிறது என்றார்கள். மீண்டும் சென்று கேட்டோம் மன்றாடினேன் முறையிட்டேன் பல தலைவர்களின் வீடுகளுக்குச் சென்றேன். கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் சென்றேன். அவர்கள் இதுகூடாது என்றார்கள்.

ஆனால், ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த இராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகா விட்டாலும் அதன் சரத்துகள் நிறைவேற்றப்படும் என்று கொழும்புக் குச் சென்று நமது வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் சொன்னார். மறுநாள் பிரதமரைச் சந்தித்து இது அக்கிரமம் அல்லவா என்றபோது அது அவருடைய தனித்த கருத்து என்று சொன்னார்.

நீங்கள் பலாலி விமானதளத்தையா பழுதுபார்த்துக் கொடுக்கப்போகிறீர்கள். அங்கி ருந்து ஏவப்பட்ட விமானங்கள்தானே நவோலியில் புனிதபீட்டர் தேவாலயத்தில் குண்டுவீசி 168 பேர் குழந்தைகளும் பெண்களும் கொல்லப் பட்டார்கள். எங்கள் தமிழ் மக்கள் சாடிக்கப்பட்டார்கள். அந்த விமானதளத்தைப் பழுதுபார்த்துக் கொடுக்காதீர்கள் என்று சொன்னோம். பழுதுபார்த்துக் கொடுத்தீர்கள்.

கோவையில் இராமகிருஷ்ணன் ஆயுதம் தாங்கிவந்த வாகனத்தை தடுத்தார் என்று வழக்கு போடுகிற கருணாநிதியைக் கேட்கிறேன். நாங்கள் செல்கிற வாகனத்தில் எங்கள் மக்களைக் கொல்வதற்கான ஆயுதங்களை எடுத்துச் செல்கிறாயா என்று சந்தேகம் வந்தது. இந்தியாவைப் பாதுகாக்க ஆயுதம் என்று நாங்கள் நினைக்கவில்லை. எங்கள் மக்களைக் கொன்றுகுவிக்கப்படுவதற்கு இந்த ஆயுதம் அனுப்பப்படுகிறது என்ற எண்ணம் வலுத்ததனால் நாங்கள் தடுத்தோம்.

காரணமில்லாமல் தடுக்கவில்லையே? இந்த ஐந்தாண்டு காலத்தில் நீங்கள் செய்த தொடர்ந்து அடுத்தடுத்து அனுப்பி வைத்தீர்கள் ஆயுதங்களை! அந்த அடிப்படையில் மீண்டும் இங்கிருந்து ஆயுதங்கள் செல்கின்றன பீரங்கிகள் செல்கின்றன கனரக ஆயுதங்கள் செல்கின்றன என்ற செய்திவந்த போது நாங்கள் நம்பினோம். இதில் என்ன தவறு? நீ யோக்கியனா? ஆயுதம் கொடுக்காத யோக்கியனா? நாங்கள் தடுத்தது தவறு என்றால். நீ ஆயுதமே ஐந்தாண்டுகளாக கொடுக்கவில்லை என்றால் நாங்கள் நடுவீதியில் மறித்தது தவறு என்று சொல்.

நீ கடந்த ஐந்தாண்டுகளாக ஆயுதங்களைக் கொடுத்தாய் - விமானதளத்தைப் புதுப்பித்துக் கொடுத்தாய் - விமானதளத்தைப் பழுதுபார்த்துக் கொடுக்க மாட்டோம் என்றார் பிரணாப் முகர்ஜி என்னிடம். மன்மோகன் சிங் நல்லமனிதர் என்று நினைத்தேன். நாணயமானவர் என்று நினைத்தேன். மன்மோகன் சிங்கும் சரி நட்வர் சிங்கும் சரி பிரணாப் முகர்ஜியும் சரி எல்லோரும் பொய்சொன்னார்கள். அந்த விமான தளம் புதுப்பித்துக் கொடுக்கப்பட்டது என்ற உண்மை 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் தேதி டொமினிக் பெராரே என்கின்ற இலங்கை விமானப்படைத் துணைத்தளபதி சர்வதேச செய்தியாளர்களை அழைத்துக் கொண்டுபோய் பலாலி விமானதளத்தைச் சுட்டிக் காட்டி இது பழுதுபார்த்துக் கொடுக்கப்பட்டுவிட்டது இதை செய்து கொடுத்தது இந்தியவிமானப்படை இதை செய்து கொடுத்தது இந்திய விமானப்படை நிபுணர்கள். இதற்கு செலவழிக்கப் பட்ட பணம் இந்திய அரசின் பணம் என்று கூறினான்.

நான் கேட்கிறேன் இது என்ன சோனியா காந்தியின் பாட்டன் வீட்டுப்பணமா? யாருடைய பணம்? ஆக, எங்கள் வரிப்பணத்தில் நீ பழுதுபார்த்துக் கொடுத்தாய். நீ பழுதுபார்த்துக் கொடுத்த இடத்தில் இருந்து புறப்பட்ட விமானம் செஞ் சோலையில் குண்டு வீசியது. நீ கொடுத்த பணத்தில் இஸ்ரேல் நாட்டுக்காரனிடம் வாங்கிய விமானம் குண்டுவீசியது அதில் 61 சின்னஞ்சிறு அநாதைச்சிறுமிகள் தாயை தந்தையை யுத்தக்களத்தில் இழந்துவிட்ட அனாதைச் சிறுமிகளை செஞ்சோலையில் துடிக்கத் துடிக்கக் கொன்றாய். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமுற்றார்கள். அதை நான் செலவழித்துக்கொடுத்த பழுதுபார்த்துக் கொடுத்த விமானதளத்தில் இருந்து புறப்பட்ட விமானங்கள் குண்டுவீசின.


இந்தக் குற்றச்சாட்டுக்கு உன்னுடைய பதில் என்ன? நீ மறுக்கமுடியாது. இதை எழுத்துமூலமாக பிரதமரிடம் தந்திருக்கிறேன் மறுக்க முடியாதபடி ஆவணங் களோடு நாங்கள் தந்திருக்கிறோம்.

(தொடரும்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 19th June 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஜூன் 25, 2009 புரட்சி 8 முழக்கம் 24 விலை: ரூ.2.50


## அறிவுரைக் கழகத்தின் முன் கோவை இராமகிருட்டிணன் கருத்து

# “யாரையோ திருப்திப்படுத்த நான் பலிகடாவாகியுள்ளேன்”

*ஈழத் தமிழர்களைக் காப்பாற்றும் நோக்கத்தோடு நாங்கள் போராட்டம் நடத்தினோம்; பொது ஒழுங்கு பாதிக்கப்பட்டதற்கு எந்த சான்றுமே இல்லை. என் மீது முறைகேடாக யாரையோ திருப்திப்படுத்த - தமிழக அரசு தேசிய பாதுகாப்பு சட்டத்தைப் போட்டுள்ளது என்று பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் அறிவுரைக் கழகத்தின் முன் கூறினார்.*

தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, கோவை சிறையில் 52 நாள்களாக அடைக்கப்பட்டுள்ள கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் சென்னையில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் அடங்கிய அறிவுரை கழகத்தின் முன் ஜூன் 22 ஆம் தேதி பகல் 1.30 மணியளவில் நேர்நிறுத்தப்பட்டார். தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் - கைது செய்யப்பட்ட 3 வாரங்களில் இப்படி அறிவுரைக் கழகத்தின் முன் நிறுத்தப்பட்டு, அவர்கள் தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதற்கான அடிப்படை சட்ட காரணங்கள் உள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. முறையான சட்டக் காரணங்கள் இல்லாமல் இருக்குமானால், அறிவுரைக் கழகத்தினரே, விடுதலை செய்யவும் உரிமை உண்டு. ஆனால் தமிழக அறிவுரை கழகத்தினர் அந்த உரிமையை பயன்படுத்தியது



இல்லை. அதனால் தான் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இதே அறிவுரை கழகத்தின் முன் எழுத்து மூலம் அளித்த அறிக்கையில் இந்தக் கழகத்தின் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்றும், கழக உறுப்பினர்களான நீதிபதிகள் மீது தாம் கொண்டிருக்கும் மதிப்பு காரணமாகவே கருத்துகளை முன் வைப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் அறிவுரை கழகத்தின் தலைமை நீதிபதி நடராசன் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்தார். பிறகு தனது பதிலுரையை எழுத்து மூலமாவும் தாக்கல் செய்தார். பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் எழுத்து மூலம் தாக்கல் செய்த பதிரை:

நான் பெரியார் திராவிடர் கழகத்தில் பொதுச் செயலாளர். பெரியாரின் உண்மைத் தொண்டன். 1976 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பொழுது அவசர நிலை (Emergency) அமுலில் இருந்த காலத்தில் ‘மிசா’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு சிறையில் இருந்தேன். ஆனாலும் மற்ற அரசியல்வாதிகளைப் போல் எந்த அரசியல் ஆதாயமும் தேடிக் கொள்ளவில்லை. பெரியார் சொன்னதுபோல எனது சொந்த காசை செலவு செய்துதான் பொதுத் தொண்டு செய்து வருகிறேன்.

1991 ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி கொலையை அடுத்து கோவையில் வெடிகுண்டு தயாரித்ததாக என் மீது பொய் வழக்கு ஒன்றை தடா சட்டத்தின் கீழ் போட்டு 3½ ஆண்டுகள் சிறையில் வைத்தது அரசாங்கம். ஆனால் 3½ ஆண்டுகள் கழித்து நான் நிரபராதி என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறி விடுதலை செய்தது. நான் 3½ ஆண்டுகள் சிறையில் இருந்ததற்கு என்ன பரிகாரம்?

இப்போது தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் ஒரு ஆண்டு சிறை என்ன குற்றம் செய்ததற்கு? இந்திய அரசே! இலங்கைத் தமிழனை காப்பாற்றா விட்டாலும் பரவாயில்லை. அவனை கொல்வதற்கு ஆயுதம் கொடுக்காதே என்று ஆர்ப்பாட்டம் செய்ததற்கு! தமிழனை முதலமைச்சராக கொண்ட தமிழ்நாடு அரசு என்னை இந்த சட்டத்தில் ஓராண்டு

(4 ஆம் பக்கம்)

## அறிவுரைக் கழகத்தில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன்

# “பெரியார் பின்னால் ஓடுவதாலேயே எங்கள் மீது கடும் அடக்குமுறை”

குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் வழக்கறிஞர் அல்லாத ஒருவர் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்ற வாய்ப்பின் கீழ் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அறிவுரைக் கழகத்தின் முன் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் சார்பில் கருத்துகளை முன் வைத்தார்.

“இராணுவத்தை எதிர்த்துப் போராடுவது பெரியார் திராவிடர் கழகத்தின் செயல் திட்டம் அல்ல; இதற்காக தீர்மானம் நிறைவேற்றி திட்டமிடப்பட்டு இந்தப் போராட்டம் நடக்கவில்லை. தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கு இந்தியா ஆயுத உதவிகளை இலங்கைக்கு செய்து வந்த நிலையில் 83 ராணுவ வாகனங்கள் வரிசையாக அணி வகுத்துச் சென்றபோது அதில் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் ஆயுதங்கள் கொண்டு செல்வதாக தகவல்கள் கசிந்தன. எப்படியாவது தடுத்திட வேண்டும் என்ற கொதிப்பில் - அப்பகுதியைச் சேர்ந்த 300 பொது மக்கள் திரண்டு வாகனங்களை மறித்தனர். செய்தியறிந்து கழகப் பொதுச்செயலாளர் இராமகிருட்டிணனும், பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும் - ம.தி.மு.க.வினர் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினரும் திரண்டனர். பத்திரிகையாளரும், தொலைக்காட்சி குழுவினரும், காவல்துறையினரும் கூட திரண்டனர். எல்லாமே வெளிப்படையாகவே நடந்தன. தமிழர்கள் கொல்லப்படப்பட்டு விடுவார்களோ என்ற பதைபதைப்பின் ஆத்திரத்தின் வெளிப்பாடு தான் இந்தப் போராட்டம்” என்று கூறிய பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கடந்த காலங்களில் இதே போல் கோவைக்கு பயிற்சி என்று சிங்கள ராணுவத்தினர் வந்த போது, பெரியார் திராவிடர் கழகத்தினர் காட்டிய எதிர்ப்பால், முதலமைச்சர் கலைஞரே தலையிட்டு பயிற்சி பெற வந்த சிங்களர்களை திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்ததை சுட்டிக்காட்டினார். அதே போல் தமிழக அரசு தலையிட்டு நிறுத்த முயலும் என்ற நம்பிக்கை தான் இந்தப் போராட்டத்துக்குக் காரணம் என்றும் விளக்கினார்.

“இங்கே வீற்றிருக்கும் மூத்த நீதிபதிகளாகிய தங்களுக்கு தமிழகத்தின் சமூக வரலாறு எங்களைவிட நன்றாகவே தெரியும். ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்கு பெரியாரின் போராட்டங்களும், கருத்துகளுமே முக்கிய தாக்கமாக இருந்ததை தாங்கள் அறிவீர்கள். அந்த கருத்துகளைத் தொடர்ந்து இளம் தலைமுறையிடம் கொண்டு சென்று பெரியார் கொள்கைகளை உயிர்த்துடிப்போடு செயல்படுத்த வேண்டும் என்பதற்காக பாடுபடும் ஒரே அமைப்பு, இன்றைக்கு பெரியார் திராவிடர் கழகம் தான். பதவி, அதிகாரம், சுயநலன் ஏதுமின்றி - சமுதாயத்துக்காகவே உழைக்கும் கொள்கை உணர்வாளர்களைக் கொண்ட இந்த இயக்கம் - அதற்காகவே கடும் விலையைத் தந்து வருகிறது. தேசிய பாதுகாப்பு சட்டம் எங்கள் இயக்கத்தினர் மீது தொடர்ந்து ஏவப்படுவதும் இந்த அறிவுரைக் கழகத்தின் முன் நாங்கள் மீண்டும் மீண்டும் வந்து நியாயம் கேட்பதும் தங்களுக்கே தெரியும். எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் பின்னால் ஓடாமல் - பெரியார் கொள்கை பின்னால் நாங்கள் ஓட விரும்புவதாலேயே நாங்கள் இவ்வளவு அடக்குமுறைகளை சந்திக்க வேண்டியிருக்கிறது என்றார்.

ஈழத்தில் எல்லாமுமே முடிந்துவிட்டது. இனப்படுகொலைகளை நடத்தி முடித்து - உரிமைக்குப் போராடிய இயக்கத்தினரையும் கொன்று குவித்துவிட்டனர். இந்தியாவின் ஆதரவோடு ஈழத் தமிழர்கள் இலங்கை அரசின் பிணையக் கைதிகளாக்கப்பட்டுவிட்டனர். இந்த நிலையில் அந்தத் தமிழர்களுக்காக குரல் கொடுத்த ஒரே “குற்றத்துக்காக” எங்கள் தோழர்கள் இப்போதும் அடக்குமுறை சட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கிறது.

இந்தப் போராட்டத்தினால் பொது ஒழுங்குக்கு பாதிப்பு ஏற்பட்டது என்று - எந்த ஆதாரங் களையும் அரசால் முன் வைக்க முடியவில்லை. எனவே தேசிய பாதுகாப்பு சட்டம் முறை கேடாகவே பயன்படுத்தப்பட்டிருப்பதால் இதை ரத்து செய்து நியாயம் வழங்க வேண்டுகிறோம்” என்று குறிப்பிட்டார்.

**– நமது செய்தியாளர்**

# பார்ப்பன வலையில் சிக்கிய மாயாவதி

உ.பி.யில் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியை சந்தித்தது தொடர்பான கட்டுரை ஒன்றை 'இந்து' நாளேட்டில் (ஜூன் 5) வித்யா சுப்ரமணியம் என்பவர் எழுதியுள்ளார். அதில் கூறப்பட்டுள்ள சில கருத்துகள்:

ஒடுக்கப்பட்ட தலித் சமூகத்தில் பிறந்த மாயாவதி, தனது சொந்த வலிமையால், உ.பி.யில் முதல்வர் பதவி வரை உயர்ந்தது உண்மையிலே முன் எப்போதும் நடந்திடாத ஒரு சாதனை தான். தலித் மக்களுக்கான கட்சி என்ற தளத்தை - அவர் விரிவுபடுத்தினார். இதனால் தலித் அல்லாதவர்களின் வாக்குகள் அவருக்கு கிடைத்தன. அதுதான் அவரது வெற்றிக்கு வழிவகுத்தது. ஆனால், மாயாவதிக்கு கூடுதலாக வாக்களிக்க வந்த தலித் அல்லாத ஓட்டர்கள் - சரித்திர காலம் தொட்டு, தலித் விரோதிகள். அதுவே மாயாவதிக்கு நெருக்கடியை உருவாக்கிவிட்டது. தலித் அல்லாதோரின் வாக்குகளையே தனது வெற்றிக்கு சார்ந்து நிற்க வேண்டியிருந்ததால் மாயாவதி மனுவாதிகளின் பிடிக்குள் சிக்கிக் கொண்டார். பகுஜன் சமாஜ் கட்சியை கன்சிராம் தொடங்கியதே மனுவாதிகளுக்கு எதிராகத்தான். மனுவாதிகளின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க வேண்டிய நிலை உருவானது. தமது தேர்தல் சின்னமான யானைக்குக்கூட மதச் சாயம் பூசினார். "இது சாதாரண யானை அல்ல; கணேசன், பிரம்மா, விஷ்ணு, மகேஷ் பகவான்களின் குறியீடு" என்று பேசத் தொடங்கினார். போர்க் குணமிக்கதாக முன் வைக்கப்பட்ட யானை குறியீடு - மதவாதக் குறியீடாக மாறிப் போனது. பதவிக்கு வந்த மாயாவதி - தனது செல்வாக்கையும், புலமையையும் வளர்த்துக் கொண்டு இந்தியாவின் பிரதமர் பதவியில் அமருவதில் ஆர்வம் காட்டினார். அவரது இரண்டு வருட கால ஆட்சி மக்களிடையே அதிருப்தியைத்தான் பெற்றுத் தந்தது. 5 ஆண்டு மன்மோகன்சிங் ஆட்சி மீதான வெறுப்பைவிட இரண்டு ஆண்டு மாயாவதி ஆட்சி மீதான வெறுப்பு அதிகமாகவே இருந்தது. தனது கடந்த கால ஆட்சிக் காலங்களில் தலித் தலைவர்களுக்கு சிலை, நினைவிடங்கள் அமைத்த அவர்களின் தொண்டினை அங்கீகரித்த மாயாவதி - அதன் வழியாக தலித் மக்களின் ஆதரவைப் பெற்றார். தீண்டாமை தடுப்புச் சட்டங்களை உறுதியாகப் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார். ஆனால், அடுத்து டெல்லியில் பிரதமர் பதவியை குறி வைத்து செயல் தொடங்கியபோது அவரது செயல் திட்டங்கள் மாறத் தொடங்கின. அவரது ஆலோசகர்களும் தவறான வழிகாட்டினர். மக்களுக்கு பயன் தராத திட்டங்களுக்கு அரசு பணம் விரயமாக்கப்பட்டன. உருப்படியான திட்டங்கள் ஏதும் இல்லை. தனக்கு வைக்கப்பட்ட சிலைகளைக்கூட - அதில் தனக்கு திருப்தி இல்லாததால் புதிய சிலைகளை வைப்பதற்கு உத்தரவிட்டார். தனது உறுதியான ஆதரவாளர்களான சமான்ய மக்களான தலித் மக்களை ஓரம் கட்டி விட்டு, பார்ப்பன முன்னேறிய சாதியினரை பதவிகளில் அமரவைத்தார்.

தலித் மக்கள் தங்கள் மீது உயர்சாதியினர் ஆதிக்கம் செலுத்துவதை மாயாவதியிடம் எடுத்துக் கூறியும் அவர் காது கொடுக்கவில்லை. உயர்பதவிகளில் பார்ப்பனர்களை அமர வைத்த மாயாவதி 80 நாடாளுமன்றத் தொகுதிகளில் 20 பார்ப்பன வேட்பாளர்களை நிறுத்தினார். மாநிலத்தில் 9 சதவீத எண்ணிக்கையுள்ள பார்ப்பனர்களுக்கு 20 இடங்களை வழங்கி, 21 சதவீதமுள்ள தலித் மக்களுக்கு 17 இடங்களை மட்டுமே ஒதுக்கினார். 'குண்டர்களின் ராஜ்யம்' நடத்தியதாகக் கூறப்பட்ட முலாயம் சிங் கட்சியிலிருந்து ஏராளமான குண்டர்கள் மாயாவதி கட்சிக்குத் தாவினர். பார்ப்பன உயர்சாதியினரும், முலாயம் கட்சி குண்டர்களும் கட்சிக்குள் ஆதிக்கம் செலுத்தியதை தலித் மக்கள் விரும்பவில்லை. இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாத மாயாவதி, தன்னுடைய புகழைப் பரப்பும் முயற்சிகளிலே ஆர்வம் காட்டினார். நாடாளுமன்றத் தேர்தலில் தனது மாநிலத்தைவிட பிற மாநிலங்களில் பிரச்சாரம் செய்வதில் கூடுதல் கவனம் செலுத்தினார். பிரதமரின் கனவு தகர்ந்தது மட்டுமல்ல; ஒவ்வொரு தேர்தலிலும் அவருக்கு அதிகரித்துக் கொண்டே வந்த ஓட்டு சதவீதம் - நடந்து முடிந்த தேர்தலில் 27.42 சதவீதமாகக் குறைந்துவிட்டது என்று 'இந்து' ஏடு கட்டுரை கூறுகிறது.

தோல்விக்குப் பிறகு - தலித் மக்கள் மீது மீண்டும் தனது கவனத்தை செலுத்த தொடங்கியிருப்பதாகவும், அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளதாகவும் செய்திகள் வருகின்றன. அத்துடன் உ.பி.யில் சிறப்புத் திட்டத்தின் கீழ் கன்னோஜ் மற்றும் ஜலான் மாவட்டங்களில் இரண்டு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 70 சதவீத இடங்கள் தலித் மற்றும் பழங்குடியினருக்கும், 27 சதவீத இடங்கள் பிற்படுத்தப்பட்டோருக்கும் 3 சதவீத இடங்கள் திறந்த போட்டிக்கும் ஒதுக்கப்படும் என்று அறிவித்துள்ளார். 97 சதவீத இடஒதுக்கீட்டை அறிவித்துள்ள அவரது அறிவிப்பு பார்ப்பனர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

# ஒரு சார்பு சுதந்திர பிரகடனம்: சில வரலாற்று தகவல்கள் (2)

***ஒரு சார்பாக – தமிழ் ஈழ விடுதலை அரசு பிரகடனம் செய்வதற்கு சட்ட அறிஞர் விசுவநாதன் உருத்திரகுமார் தலைமையில் செயல்திட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக – அனைத்துலக உறவுகளுக்கான செயலகத்தின் பொறுப்பாளர் செல்வராசா பத்மநாபா அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்தக் கருத்து – விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிகாரபூர்வமானதா என்பது பற்றிய தகவல்கள் இல்லை என்றாலும் இத்தகைய ஒரு சார்பு சுதந்திரப் பிரகடனங்கள் வரலாற்றில் விடுதலைக்கு முன் நிகழ்ந் துள்ளன. அது பற்றிய சில வரலாற்றுத் தகவல்கள்:***

## கொரியா

ஜப்பானிய காலனி ஆதிக்கத்தின் கீழ் கொரியா இருந்த காலத்தில் கொரிய தேசியம் ஒடுக்குமுறைக்குள்ளானது. கொரிய மொழி, கலாச்சாரம் சிதைக்கப்பட்டன. கொரியாவின் கலாச்சார சொத்துகள் ஜப்பானால் சூறையாடப்பட்டன. 1900களின் தொடக்கத்தில் கொரிய விடுதலை இயக்கங்கள் வீச்சோடு எழுந்தன. 1919 ஆம் ஆண்டு அமெரிக்காவின் உட்ரோ உல்சன், பாரிஸ் அமைதி மாநாட்டில் சுய நிர்ணய உரிமை தொடர்பாக ஆற்றிய உரையானது கொரிய மாணவர்கள் மத்தியில் விடுதலைக் கிளர்ச்சியைத் தீவிரமாக்கியது. அத்தகைய எழுச்சிகளுடன் மார்ச் 1 இயக்கம் என்ற இயக்கமும் தீவிரமாக களத்தில் இறங்கியது. மார்ச் 1919 ஆம் நாளன்று கொரியாவின் 33 தேசியவாதிகள் "ஒருதலைபட்ச சுதந்திரப் பிரகடனத்தை" வெளியிட்டனர். 12 மாதங்களில் இந்தப் போராட்டத்தை ஜப்பானிய ஆதிக்க அரசு ஒடுக்கியது. இந்தப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி 1500 ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. 20 இலட்சம் கொரியர்கள் இவற்றில் பங்கேற்றனர். இப்போராட்டத்தில் ஏறத்தாழ 7500 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 45 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். இந்த சுதந்திரப் பிரகடனமே கொரியாவின் விடுதலைக்கும் வித்திட்டது என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## லிதுவேனியா

ஜெர்மனிய துருப்புகள் தனது நாட்டில் நிலை கொண்டிருந்தபோதும் 1918 ஆம் ஆண்டு லிதுவேனியா சுதந்திர நாடாக பிரகடனம் வெளியிட்டு ஜனநாயக கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தியது. அதன் பின்னர் லிதுவேனியா சோவியத் ஒன்றியத்தில் இணைக்கப்பட்டது. 1990களில் சோவியத் ஒன்றியம் வீழ்ந்தபோது சோவியத் ஒன்றியத்திலிருந்து வெளியேறி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்ட முதலாவது நாடு லிதுவேனியாவாகும்.

## பிரகடனத்துக்குப் பின்னர் கொரில்லா யுத்தம் நடத்திய பிலிப்பைன்ஸ்

1898 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் நாளன்று ஸ்பெயினின் காலனி ஆதிக்கத்துக்கு எதிராக பிலிப்பைன்ஸ் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டது. ஆனால், பிலிப்பைன்சின் ஆக்கிரமிப்பாளர்களான அமெரிக்காவும் ஸ்பெயினும் இதனை ஏற்க மறுத்தன.

1898 ஆம் ஆண்டு ஜூன் 23 முதல் செப்டம்பர் 10 வரை முதலாவது தேர்தல்கள் நடத்தப்பட்டன. பிலிப்பைன்சின் அரச தலைவராக அகுனல்டோ தெரிவு செய்யப்பட்டார். முதலாவது பிலிப்பைன்ஸ் குடியரசானது 1899 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதனிடையே அமெரிக்காவுக்கும் ஸ்பெயினுக்கும் இடையேயான ஒப்பந்தம் ஒன்றின் மூலம் ஸ்பெயின் வெளியேறிவிட பிலிப்பைன்சில் அமெரிக்கா நின்றது.

1899 ஆம்ஆண்டு அமெரிக்காவும் பிலிப்பைன்ஸ் குடியரசுக்கும் இடையே யுத்தம் வெடித்தது.

இந்த யுத்தத்தின்போது இடைக்கால உத்தியாக பிலிப்பைன்ஸ் அரச தலைவர் அகுனல்டோ, கொரில்லா போர் முறையை கடைபிடிக்க தெரிவு செய்தார். அமெரிக்க இராணுவத்துக்கு பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டது. 1901 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் அரச தலைவர் அகுனல்டோ, சில துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் 1901 ம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாள் அமெரிக்காவின் அரசாட்சியை ஏற்பதாகவும் தனது படையினரின் ஆயுதங்களை ஒப்படைப்பதாகவும் அகுனல்டோ அறிவித்தார். அதன் பின்னரும் பிலிப்பைன்ஸ் விடுதலைக்கான யுத்தம் நடைபெற்றது.

1935 ஆம் ஆண்டு பிலிப்பைன்சுக்கு அரைவாசி சுயாட்சி உரிமை அளித்த அமெரிக்கா, 1946 ஆம் ஆண்டு முழு சுதந்திரம் அளித்தது.

1898 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுதந்திரப் பிரகடனம் ஏற்கப்பட்டது. பிலிப்பைன்ஸ் மக்கள் இன்றளவும் சுதந்திரப் பிரகடன நாளை "கொடி நாளாக" கடைபிடித்து வருகின்றனர்.

## ஐ.நா. உருவான பின்னர்: வியட்நாம்

1887 இல் தென் கிழக்கு ஆசியாவில் வியட்நாம், கம்போடியா, லாவோஸ் உள்ளிட்ட பகுதிகளை இணைத்து பிரெஞ்ச் இந்தோ சீனா என்கிற ஒன்றியம் உருவாக்கப் பட்டது.

இரண்டாம் உலகப் போரின்போது இந்தோ சீனத்தில் இருந்த டொன்கின் பகுதியை ஜப்பான் பயன்படுத்த பிரான்சு அனுமதித்தது. இதனைத் தொடர்ந்து ஒட்டு மொத்த இந்தோ சீனா ஒன்றிய ஆளுகையை ஜப்பான் கைப்பற்றியது. 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி மீது அணுகுண்டுகள் வீசப்படும் நாள் வரை இந்த ஆதிக்கம் நீடித்தது.

இந்நிலையில் 1945 ஆம் ஆண்டு செப்டம்பர் 2 ஆம் நாளன்று வியட்நாமிய விடுதலைப் பிரகடனத்தை ஹோசிமின் வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து பிரெஞ்சு படையினருக்கும் வியட்நாமியர்களுக்கும் இடையே மோதல் உருவானது.

1946 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் நாளன்று பிரெஞ்சு ஒன்றியம் மற்றும் இந்தோ-சீன கூட்டமைப்பில் வியட்நாம் ஒரு சுயாட்சி பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டது. வட வியட்நாமில் நிலை கொண்டிருந்த சீன இராணுவத்தை வெளியேற்றும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சீனப் படை வெளியேறிய உடன் மோதல் மூண்டது. ஹோசிமின் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் தப்பினார்.

1950 ஆம் ஆண்டு மீண்டும் வியட்நாமிய விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார்.

அதே ஆண்டுகளில் ருசியாவின் ஸ்டாலின் மற்றும் சீனாவின் மாவோவை ஹோசிமின் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் சோவியத் ருசியா மற்றும் சீனாவினால் வியட்நாம் அங்கீகரிக்கப்பட்டது.

கொரில்லா போர் முறை மூலம் பிரெஞ்சுப் படைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. வட வியட்நாமிலிருந்து பிரெஞ்சுப் படைகள் வெளியேற வியட்நாமிய குடியரசுப் பிரகடனம் செய்யப்பட்டது. தென் வியட்நாமில் பிரெஞ்சு, பிரித்தானியா மற்றும் அமெரிக்கப் படைகள் நிலை கொண்டிருந்தன. 1954 ஆம் ஆண்டு அப்பிராந்தியத்திலிருந்து பிரெஞ்சுப் படைகள் வெளியேற அமெரிக்காவின் தலையீடு தொடங்கியது. அதுவே வியட்நாம் போருக்கும் வழி வகுத்தது.

## இஸ்ரேல்

1947 ஆம் ஆண்டு பாலஸ்தீனை இரண்டாகப் பிரித்து இஸ்ரேலை உருவாக்க

4 ஆம் பக்கம்

## கோவை கூட்டத்தில் வைகோ கேள்வி

# ஈழத்தமிழர் பற்றி சோனியா ஒரு வார்த்தை பேசியது உண்டா?

*ஈழத் தமிழர் பிரச்சினைப் பற்றி சோனியா எந்த ஒரு இடத்திலாவது இதுவரை ஒரு வார்த்தையாவது பேசியது உண்டா என்று கோவையில் 8.6.2009 அன்று பெரியார் திராவிடர் கழகம், ம.தி.மு.க. நடத்திய மாபெரும் பொதுக் கூட்டத்தில் வைகோ கேட்டார். உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி.*

சென்ற ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி எனக்கு எழுதிய கடிதத்தில் இலங்கைக்கு நாங்கள் இராணுவ உதவி செய்திருக்கிறோம் என்று ஒப்புக் கொண்டு இருக்கிறார். இதற்கு மேல் என்ன சாட்சியம் வேண்டும்? இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்கு நாங்கள் இராணுவ உதவி செய்து இருக்கிறோம்.

இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்கு நீ இராணுவ உதவி செய்வாயா? இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற நீ யார்? நீ என்ன உலகத்தில் இருக்கும் எல்லா நாட்டின் ஒருமைப்பாட்டையும் காப்பாற்றுகின்ற காவல்காரனா? அப்படியானால் நீ எப்படி டாக்காவுக்கள் நுழைந்தாய்? உனக்கு டாக்காவில் கிழக்குப் பாகிஸ்தானில் என்னவேலை? நீ எப்படி இன்னொரு நாட்டுக்குள் நுழைந்தாய் என்று கேட்க மாட்டார்களா,


அன்றைக்கு மனிதாபிமான அடிப்படையில் மனிதஉரிமைகளைக் காப்பாற்றப் போகிறோம் என்றுசொல்லி இந்திரா காந்தி அவர்கள் அறிவித்தார். நாங்களும் வரவேற்றோம். இன்றும் வரவேற்கிறேன். பூபேஷ்குப்தா ராஜ்யசபாவில் சொன்னார் இது சர்வதேச மனிதஉரிமை பிரச்சனை. இந்திய இராணுவம் செல்லட்டும் என்றார். அப்படியானால், இன்னொரு நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற நீ இராணுவத்தை அனுப்புவாயா?

அப்படியானால் கிழக்கு ஆசியாவில் எந்த தேசத்தில் ஒருமைப்பாடு உடையும் என்றாலும் இராணுவத்தை நீ அனுப்புவாயா? பக்கத்தில், தூரத்தில் இருக்கின்ற எந்த நாடுகளிலும் பிரச்சனை என்றால் நீ அங்கு ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற இராணுவத்தை அனுப்புவாயா? அந்த ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்து இந்திய ஒருமைப்பாட்டை புதைகுழிக்கு அனுப்பி விடாதே.

உனக்கும் எனக்கும் என்ன உறவு? பெரியார் கேட்டார். அவர் கடைசிக் கூட்டத்தில் கேட்டார். பெரியார் வழிவந்த பேரப்பிள்ளைகள் கேட்கிறோம். உனக்கும் எனக்கும் என்ன உறவு என்று கேட்க மாட்டோமா? உனக்கும் எனக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட உறவு 200 ஆண்டுகளுக்குள். யூனியன் ஜாக் கொடி உயர்த்தப்பட்டதற்குபின்னே. பிரிட்டிஷ்காரன் வந்ததற்குப்பின்னே. அவன் லத்திக் கம்பும் துப்பாக்கியும், பல்வேறு நாடுகளாக சிதறிக்கிடந்த பூபாகத்தை ஒன்றாக இணைத்ததற்குப்பின்னே வந்த உறவு. இன்றைக்கு ஏற்றுக் கொள்கிறோம் இந்திய ஒருமைப்பாட்டை.

இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். இறையாண்மையில் நம்பிக்கை வைத்து இருக்கிறோம். உறுதிமொழி எடுத்து இருக்கிறோம் நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், இந்த உறவு நூறு ஆண்டுகளுக்குள் வந்த உறவு ஆனால், ஈழத்தில் இருக்கிற எங்கள் தமிழ் ஈழ உறவு தொப்பூள்கொடி உறவு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய உறவு. கரிகாலனுக்கு முந்தைய உறவு. தொல்காப்பியனுக்கு முந்தைய உறவு. அந்த உறவை நாங்கள் இழந்துவிட முடியாது.

ஆயுதங்கள் அனுப்பினாய் - பணம் கொடுத்தாய் - வட்டியில்லாக் கடன் கொடுத்தாய் - இந்திய இலங்கை கடற்படை தகவல் கூட்டு ஒப்பந்தம் போட்டாய் - விடுதலைப் புலிகளுக்கு வந்த கப்பல்களை கடலில் மூழ்கடித்தாய் - இவ்வளவும் செய்துவிட்டு ஆயுதங்கள் கொடுத்தாயே - ராடார்கள் கொடுக்கவில்லை என்று இப்பொழுது சொல்கிறார்கள். இங்கே வாசித்தாரே ஜெயசூர்யா என்பவனின் கட்டுரையை, இலங்கை இராணுவ இணையதளத்தில் வந்த கட்டுரையை,



நீ கொடுத்த ராடார்களை, இயக்குவதற்கு சிந்தாமணி ரவுத், ஏ.கே.தாகூர் என்று இரண்டு இந்தியர்கள் அவர்கள் போரின் போது காயப்பட்டார்கள். அப்ப நீ இங்கே இருந்து ஆயுதம் அனுப்புவாய் - நிபுணர்களை அனுப்புவாய் - துப்பு கொடுப்பாய் - சாட்டிலைட் காமிராவில் அவர்களது நடமாட்டங்களைத் துல்லியமாக படம் பிடித்துக் காட்டுவாய் - இந்த யுத்தத்தை இந்திய அரசுதான் நடத்தியது.

ஆகவேதான், சோனியா காந்தி அம்மையார் என்ன திட்டம் போட்டார். தமிழ்நாட்டை பொறுத்தமட்டில் கருணாநிதியின் மதுரத் தமிழால் தமிழ்மக்களை வசப்படுத்திக் கொள்வார் அவர் பேச்சில் வல்லவர். இனியதமிழில் - திகட்டாத தமிழில் - தித்திக்கும் தமிழில் பேசுவதில் வல்லவர் எழுதுவதில் வல்லவர் பக்கம் பக்கமாக வர்ணிப்பதில் வல்லவர் அப்படிப்பட்ட மயக்குமொழியில் முரசொலியில் மட்டுமல்ல அனைத்துப் பத்திரிகைகளிலும் எட்டுகாலங்கள் அவருடைய கடிதங்கள், முக்கியத் தொலைக் காட்சிகள் எல்லாம் அவர் குடும்ப ஊடகங்கள் அது கோடிக்கணக்கான மக்களைப் போய்ச் சேர்கின்றன.

தமிழகத்தில் கொந்தளிப்பு ஏற்படுகிறது 14 பேர் தீக்குளித்தைச் சொன்னேனே ஒருவருக்குக்கூட இன்றைய முதலமைச்சர் இரங்கல் தெரிவிக்கவில்லை. ஆனால், இவ்வளவு செய்துவிட்டு ஈழத்தமிழர்களுக்கான ஆதரவு உணர்ச்சி இங்கே எழுந்து விடக் கூடாது என்று அந்த உணர்வை தனக்கு அரசியல் ரீதியாக சாதகமாக்கப் பார்த்தார். உண்ணாவிரதம் இருந்தார் - சட்டமன்றத்தில் தீர்மானம் என்றார் - ராஜினாமா என்றார் - 1956 ஆம் ஆண்டில் இருந்து அவருடைய போராட்டங்களை வர்ணித்தார் - அங்கு மக்கள்படுகிற துன்பத்தை துயரத்தை அவருக்கே உரிய ஆற்றலோடு எழுதினார். ஆக கலைஞரே கவலைப்படுகிறார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தினார்.

ஒருபக்கத்தில் ஆயுதங்களைத் தந்து கொண்டே இருந்தது தில்லி அரசு. தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டே இருந்தார்கள். தமிழகத்தில் எதிர்ப்பு உணர்வு வேகமாக வந்துவிடக்கூடாது என்று தடுக்கின்ற வேலையில் கருணாநிதி அவர்கள் ஈடுபட்டார்கள். மத்திய அரசின் கொள்கைதான் என்னுடைய கொள்கை என்றார். இன்னொரு நாட்டில் இதற்குமேலே தலையிட முடியாது என்றார்.

ஆனால், இவ்வளவு மக்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்களே, 1,45,000 மக்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். எங்கே நடக்கும் இந்த இனக் கொலை? இன்றைக்கு உலகில் பலதேசங்கள் ஈழத்தமிழர்களுக்கு நேர்ந்த துயரத்தைத் தடுப்பதற்கு குரல் கொடுக்கிறபோது இந்தியா இலங்கையோடு சேர்ந்து ஓட்டுப் போட்டது. இன்றுமட்டுமல்ல, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சுவிட்சர்லாந்து நாடும், நியூசிலாந்தும் ஐ.நா. பொதுமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தது. அந்தத் தீர்மானத்தை இந்தியா தோற்கடித்தது. தோற்கடிப்பதற்கு முழுமூச்சாக வேலை செய்தது.

ஆகவே, உலக அரங்கத்தில் நியாயமாக எழுகின்ற உணர்வுகளைப் பாரக்கிறோம். யார் அந்த பாரக் ஒபாமா? அவருக்கும் தமிழருக்கும் என்ன தொப்பூள் கொடி உறவு? யார் அந்த கார்டன் பிரௌன் இங்கிலாந்து நாட்டுப் பிரதமர் அவருக்கும் தமிழனுக்கும் என்ன உறவு? யுத்தத்தை நிறுத்து என்று அவர்கள் சொன்னார்கள். நெல்சன் மண்டேலா அவருக்கும் தமிழருக்கும் என்ன உறவு? யுத்தத்தை நிறுத்து என்றார். ஆப்பிரிக்க நேஷனல் காங்கிர சொன்னது. தென்னாப்பிரிக்கா சொன்னது. ஆனால், ஏன் மன்மோகன் சிங் கடைசிவரை யுத்தத்தை நிறுத்தச் சொல்லவில்லை?

கடைசி நிமிடம் வரை சோனியா காந்தி இந்தியாவில் எந்தக் கூட்டத்திலாவது ஈழத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள் என்று ஒருவார்த்தை உச்சரித்தாரா? தமிழர்களே இதை நீங்கள் யோசிக்கவேண்டும். இன்றைக்கு இந்திய அரசை தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கும் ஆட்டுவித்துக் கொண்டிருக்கிற சோனியாகாந்தி ஈழத் தமிழர்களைப் பற்றி எங்காவது ஒரு இடத்தில் ஒரு கூட்டத்தில் பேசினாரா? பச்சிளம் குழந்தைகளும், தாய்மார்களும் கொல்லப்பட்டார்களே, உணவும் மருந்தும் இன்றி செத்தார்களே, அதுபற்றி எங்காவது சொன்னாரா? எங்கே நடந்தது இந்தக் கொடுமை?

அமெரிக்க ஜனாதிபதி ஜெர்மனியில் ஹிட்லர் நடத்திய சித்ரவதைக் கூடத்தைப் பார்த்துவிட்டு மெழுகுவர்த்தி ஏற்றுகிறார். அதுமட்டுமல்ல, அதற்கு முதல்நாள் கெய்ரோவில் பேசுகிறார். நைல் நதிக்கரையில் - பிரமிடுகள் உயர்ந்து இருக்கிற எகிப்து நாட்டுத் தலைநகரில் அங்கே உள்ள பல்கலைக் கழகத்தில் பேசுகிறார். பேசுகிறபோது என்ன சொல்கிறார்? இதைக்கவனிக்க வேண்டும் தமிழர்கள்.

அமெரிக்க நாட்டில் இருக்கிற யூதச் செல்வந்தர்களின் தயவு இருந்தால்தான் அங்கே அரசியலை ஜாக்கிரதையாக நடத்தமுடியும். ஆனால், அங்கே சென்று பேசுகிறார். யூதர்களுக்கும் ஒரு தனிநாடு பாலஸ்தீனியர்களுக்கும் ஒரு தனி நாடு இந்த இரண்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் என்று பேசினார். அதோடு நிறுத்தவில்லை.

பாலஸ்தீனியர்களின் பகுதி என்று கருதப்படுகிற இடத்தில் யூதக்குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். யூதக்குடியேற்றங்கள் பாலஸ்தீன மண்ணில் இடம்பெறக் கூடாது என்று பாரக் ஒபாமா சொல்கிறார். பாலஸ்தீனியர்களுக்கு தனிநாடு வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். இரண்டு தேசங்கள். இரண்டு நாடுகள். அதைவிட ஆயிரம் மடங்கு நியாயம் தமிழ் ஈழத்துக்கு உண்டே; படித்தவர்களே யோசியுங்கள். தொலைவில் இருந்து கேட்டுக் கொண்டு இருப்பவர்களே யோசியுங்கள்.

பாலஸ்தீனியர்களுக்கும் யூதர்களுக்கும் இருக்கிற பிரச்சனை 4000 ஆண்டுகளாக சிக்கலில் இருக்கிற பிரச்சனை. நான் பாலஸ்தீனியர்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரிப்பவன். அராபாத் நடத்திய போராட்டங்களை அன்றுமுதல் ஆதரிப்பவர்கள் நாங்கள். இன்றும் பாலஸ்தீனியர்களுக்கு தனிதேசம் வேண்டும் என்பதை நாங்கள் ஆதரிப்பவர்கள். ஆனால், பிரச்சனையின் சிக்கல் முடிச்சு எங்கே அவிழ்க்கபட வேண்டும் என்று சொன்னால் 4000 ஆண்டுகளாக அந்தப் பிரச்சனை இருக்கிறது.

யாருக்குச் சொந்த பூமி? யாருடைய பூர்வீக பூமி என்று. அந்தச் சர்ச்சைக்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஆனால், இங்கே சர்ச்சைக்கே இடம் இல்லையே? வல்வெட்டித்துறையும் - யாழ்ப்பாணமும் தமிழர்களின் பூர்வீக பூமி. வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பூர்வீகப் பூமி. 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் தேதி அன்றைய இந்தியப் பிரதமர் ஈழத்தமிழர்களுக்கு வாழ்வுகொடுக்க வேண்டும் என்று துடித்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னார்கள் ‘வடக்கிலும் கிழக்கிலும் வாழுகிற தமிழர்கள் அந்த மண்ணின் பூர்வீகக் குடிமக்கள். சிங்களவர்கள் அல்ல. தமிழர்கள் பூர்வீகக்குடிமக்கள்’, என்றார்.

அந்த பூர்வீகக் குடிமக்கள் அவர்களுக்கு என்று தனிதேசம் அமைத்து வாழ்ந்தவர்கள். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அரசு அமைத்து வாழ்ந்தவர்கள். பாலஸ்தீனிய யூத பிரச்சனையில் இந்த உண்மை களை நீங்கள் பார்க்க முடியாது. ஆனால், தமிழர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அரசு அமைந்து வாழ்ந்தவர்கள். ஒல்லந்தர் வருவதற்கு முன்பு - போர்ச்சுகீசியர் வருவதற்கு முன்பு - பிரித்தானியர் வருவதற்கு முன்பு - அரசு அமைத்து கொற்றம் நடத்தி வாழ்ந்தவர்கள்.

(தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# 11வது நிமிடத்தில் இஸ்ரேலை அங்கீகரித்த, அமெரிக்கா!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துலக நாடுகள் தீவிரம் காட்டின. இதனை அரபு லீக் எதிர்த்த நிலையில் 1948 ஆம் ஆண்டு மே 14 ஆம் நாள் இஸ்ரேல், ஒரு தலைபட்ச பிரகடனத்தை அறிவித்தது. இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்ட 11 ஆவது நிமிடத்தில் அமெரிக்கா இப் பிரகடனத்தை அங்கீகரித்தது. அதனைத் தொடர்ந்து கௌதமாலா, நிக்கரகுவா, ஊருகுவே ஆகிய நாடுகள் அங்கீகரித்தது. மே 17 ஆம் நாள் சோவியத் ருசியா, இஸ்ரேலை அங்கீகரித்தது. அதன் பின்னர் பல நாடுகள் இஸ்ரேலை அங்கீகரித்தன.

## பாலஸ்தீன்

1988 ஆம் ஆண்டு பாலஸ்தீன் விடுதலை இயக்கத்தின் சட்டவாக்க அமைப்பான பாலஸ்தீன தேசிய சபையானது பாலஸ்தீன சுதந்திரப் பிரகடனத்தை ஒருதலைபட்சமாக "அல்ஜைரில்" வெளியிட்டது. மேலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் எந்த ஒரு பாலஸ்தீன பிரதேசமும் இருக்க வில்லை. பாலஸ்தீனப் பகுதிகளில் "ஒரு நடைமுறை அரசாங்கத்தை" அது கொண்டிருக்கவில்லை. தொடக்கத்தில் பாலஸ்தீனத்தை ஐ.நா. அங்கீகரிக்க வில்லை. ஆனால் அரபு நாடுகள் அங்கீகரித்தன. பாலஸ்தீன அரசாங்கத்தை அங்கீகரிக்காத போதும் ஓஸ்லோ ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியம் பாலஸ்தீன நிர்வாக சபையுடன் இராஜதந்திர உறவுகளை மேற்கொண்டு வருகிறது. அண்மையில் ஹமாஸ் இயக்கம், ஜனநாயக முறைப்படியான தேர்தலில் பாலஸ்தீனத்தில் வெற்றி பெற்ற போதும் பல்வேறு நாடுகள் அதனை அங்கீகரிக்க மறுத்தன. நிதி உதவிக நிறுத்தப்பட்டன. ஹமாசின் ஆட்சியும் கவிழ்க்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## சோமாலிலாந்த்

அனைத்துலகத்தினால் அங்கிகரிக் கப்பட்ட சோமாலியாவின் தெற்குப் பகுதியில் ஏடன் கடற்பரப்பை யொட்டி சோமாலிலாந்த் என்ற பெயரில் "நிழல் அல்லது நடைமுறை சுதந்திரக் குடியரசு" பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு மே 18 ஆம் நாளன்று சோமாலியாவிலிருந்து சோமாலிலாந்த் சுதந்திரமடைந்ததாக அந்நாட்டு மக்கள் பிரகடனம் செய்தனர். இதனை அனைத்துலக சமூகமோ பிறநாடுகளோ இதுவரை அங்கீகரிக்கவில்லை.

இதனது எல்லைகளாக மேற்குப் பகுதியில் டிஜிபௌட்டி, தென் பகுதியில் எத்தியோப்பியா, கிழக்கில் சோமாலியா என பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இதன் மொத்த மக்கள் தொகை 3.5 மில்லியனாகும்.

1884 ஆம் ஆண்டில் சோமாலிலாந்த், பிரித்தானியாவின் ஆக்கிரமிப் புக்குள்ளானது. 1898 ஆம் ஆண்டு வரை பிரித்தானிய இந்தியாவில் சோமலிலாந்த் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் 1905 ஆம் ஆண்டு காலனி அலுவலகம் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.

1960 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் நாள் பிரித்தானியாவிடமிருந்து சோமாலிலாந்த் சுதந்திரமடைந்தது. ஆனால் 5 நாட்களுக்குப் பின்னர் 1960 ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் நாள் இத்தாலி ஆக்கிரமித்தது. பிறகு சோமாலிலாந்தில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதுவும் பிரித்தானிய சோமாலிலாந்துடன் இணைக்கப்பட்டு இன்றைய சோமாலியா நாடு உருவாக்கப்பட்டது.

இப்புதிய சோமாலியாவில் தமது இன மக்களது அபிலாசைகள் நிறைவேற்றப்படவில்லை என்று முன்னைய பிரித்தானிய சோமாலிலாந்த் மக்கள் போர்க்கொடி உயர்த்தினர். இதனால் 1980களில் சோமாலியாவில் உள்நாட்டு யுத்தம் வெடித்தது. 1991 ஆம் ஆண்டு சோமாலிலாந்த் காங்கிரஸ், சோமாலியாவிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்து சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டது.

1994 ஆம் ஆண்டு சோமாலிலாந்த் மத்திய வங்கி உருவாக்கப்பட்டது. சோமாலிலாந்தின் தேசியக் கொடி 1997 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு மே 31 ஆம் நாளில் சோமாலிலாந்த் அரசியல் சட்டம் மக்களின் வாக்கெடுப்பின் மூலம் ஏற்கப்பட்டது.

சோமாலிலாந்த் அரசியல் சட்டப்படி, சோமாலிய மொழி ஆட்சி மொழியாகும். பாடசாலைகளிலும், மசூதிகளிலும் அரபி மொழி பயன்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் ஆங்கில மொழி கற்பிக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, இத்தாலி மற்றும் எத்தியோப்பியாவில் அறிவிக்கப்படாத தூதரகங்களையும் சோமாலிலாந்த் உருவாக்கியுள்ளது. 20-க்கும் மேறபட்ட அமைச்சுப் பொறுப்புகள் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாத நடைமுறை அரசாங்கம் இயங்கி வருகிறது.

பெல்ஜியம், கானா, தென்னாப்பிரிக்கா, சுவீடன், ருவாண்டா, நார்வே, கென்யா, அயர்லாந்து ஆகிய நாடுகளிடனும் சோமாலிலாந்த் அரசியல் உறவுகளைப் பேணி வருகிறது.

2007 ஆம் ஆண்டு சனவரி 17 ஆம் நாளன்று சோமாலிலாந்துடன் இணைந்து செயற்படுவது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினர் சோமாலிலாந்த் சென்றனர்.

அதேபோல் ஆப்பிரிக்க ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் 2007 ஆம் ஆண்டு சனவரி 29 மற்றும் 30 ஆகிய நாள்களில் சோமாலிலாந்துக்கு பயணம் மேற்கொண்டனர்.

எத்தியோப்பியாவின் பிரதமர், 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சோமாலிலாந்த் பயணம் மேற்கொண்டு அந்நாட்டு அரசு தலைவர் ககினைச் சந்தித்து உரையாடினார்.

சோமாலிலாந்த்தை ஆப்பிரிக்க ஒன்றியம் அங்கீகரிக்க மறுக்கும் நிலையில் எத்தியோப்பியா, சோமாலிலாந்துக்கான அங்கீகாரத்துக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். (தொடரும்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சிறையில் அடைக்கிறது. ஆள்பவர்களுக்கு தமிழன் என்ற உணர்வு இல்லாமல் போகட்டும். போட்ட உத்தரவு சட்டப்படியாவது செல்லுமா? என்பதை ஆராய்ந்து இந்த முறையாவது நியாயம் வழங்குங்கள்.

1989 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இலங்கையில் தமிழர்களை கொன்று விட்டு இந்தியா திருப்பிய இந்திய ராணுவத்தை வரவேற்க மாட்டேன் என்று இன்றைய தமிழக முதலமைச்சரே சட்டமன்றத்தில் கூறினார். இவ்வாறாக ஈழத் தமிழர்களை கொன்ற இந்திய ராணுவத்திற்கு எதிராக சனநாயக நெறிமுறைகளுக்கு உட்பட்ட கருத்து தெரிவிப்பது வழக்கம் தான். நாங்களும் அவ்வாறாகவே ஈழத் தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அரசுக்கு ஆயுத உதவி செய்யும் இந்திய ராணுவத்திற்கு எதிராக எங்கள் மனவேதனையை தெரிவித்து வந்தோம்.

இலங்கையில் நடந்த போருக்கு இந்திய அரசு முழு அளவில் துணை நின்றது. அன்றாட நடவடிக்கைகளை இந்திய அரசுக்கு தெரிவித்து வந்தோம் என இலங்கை அதிபர் ராஜபக்சேவே கூறியிருக்கிறார். இலங்கையில் ஒரே நாளில் 25000 தமிழர்கள் கொல்லப்பட்டது உள்ளிட்ட போர் குற்றங்களை அய்.நா. சபை மனித உரிமை கவுன்சிலில் விசாரிக்கப்பட வேண்டும் என்று உலக நாடுகளால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் இலங்கை அரசுக்கு ஆதரவாகவே வாக்களித்தது இந்திய அரசு.

இவ்வாறாக இந்திய அரசு இலங்கைக்கு வெளிப்படையாகவே கொள்கை ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் உதவி வந்தது. இதை எதிர்த்ததால் சூலூர் காவல் நிலைய குற்ற எண் 549/2009-ன் கீழ் நான் உட்பட 44 பேரை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். என்னை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் காவலில் வைத்துள்ளனர். ஒருவரை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் தடுப்பு காவலில் வைக்கவேண்டும் என்றால் அவரால் பொது ஒழுங்கு பராமரிப்புக்கு குந்தகம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இந்த தடுப்புக் காவல் ஆணையை பிறப்பித்த மாவட்ட ஆட்சியரின் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் எதிலும் நான் பொது ஒழுங்கு பராமரிப்புக்கு குந்தமாக நடந்து கொண்டதாக யாருமே சாட்சி கூறவில்லை.

அதனால்தான் மாவட்ட ஆட்சியர் அப்போராட்ட செய்திகளை தினமலர், தினத்தந்தி, தினகரன், இந்து பத்திரிகைகளை பார்த்து தெரிந்து கொள்ளலாம் என்கிறார். ஆனால், அந்த பத்திரிகைகளில் பொது ஒழுங்குக்கு பாதிப்பு ஏற்பட்டதாக எந்த செய்தியும் இல்லை. யாரையோ திருப்திப்படுத்த நான் பலிகடா ஆக்கப்பட்டுள்ளேன். தவறை தவறு என்று சுட்டிக்காட்டிய என்மீது பிறப்பிக்கப்பட்டிருக்கும் தடுப்புக் காவல் ஆணையை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று கோவை இராமகிருட்டிணன் குறிப்பிட்டுள்ளார்.

கழகப் பொதுச்செயலாளர் சென்னை கடற்கரை சாலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்துக்குள் உள்ள அறிவுரைக் கழக அலுவலகத்துக்கு 22 ஆம் தேதி பகல் 11 மணியளவில் அழைத்து வரப்பட்டார். முதல் நாளே 21 ஆம் தேதி காலை கோவை சிறையிலிருந்து போலீஸ் பாதுகாப்போடு வேன் மூலம் அழைத்து வரப்பட்ட பொதுச்செயலாளர் முதல் இரவு புழல் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். பிற்பகல் 2.30 மணிக்கு மீண்டும் கோவை சிறைக்கு வேன் மூலம் அழைத்து செல்லப்பட்டார்.

**கழகத் தோழர்கள்:** கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் கேசவன், உமாபதி, தபசி குமரன், அன்பு. தனசேகரன், அண்ணாமலை, இராவணன், தீபக், சுகுமார், தியாகு, இராசு உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் திரண்டு வந்து பொதுச்செயலாளரை சந்தித்தனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

**தமிழர்களே!**
**ஒடுக்குமுறை**
**வழக்குகளை சந்திக்க**
**நிதி குவிப்பீர்!**

## இதுதான் மதச்சார்பின்மையா?

துணை முதல்வர் பொறுப்பு ஏற்றுள்ள மு.க. ஸ்டாலின் பங்கேற்ற 'மெட்ரோ ரயில்' திட்ட தொடக்க விழாவில் பார்ப்பன புரோகிதர்கள் வேதம் ஓத - அதை துணை முதல்வர் பயபக்தியோடு வணங்கி ஏற்க திட்டம் தொடங்கியதாம்.

இதேபோல், தமிழக அரசு புதிதாக கட்டி வரும் சட்டசபைக் கட்டிடத்துக்கு "பூமி பூஜை" போடப்பட்டு அமைச்சர்கள் பார்ப்பன வேத புரோகிதர்கள் முன் பயபக்தியுடன் நின்றார்கள்.

பா.ஜ.க.வின் 'இந்துத்துவா' ஆட்சியில் நடப்பதுபோல் தி.மு.க. ஆட்சியிலும் சடங்குகள் நடக்கின்றன. இது தான் மதச்சார்பின்மை ஆட்சிக்கான இலக்கணமா? அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை அகற்றக் கோரி அண்ணா போட்ட உத்தரவை - அவரது நூற்றாண்டில்கூட செயல்படுத்தக் கூடாதா?

அலுவலக வளாகங்களில் கோயில் கட்டுவதுகூட அதிகரித்து வருகிறது. தி.மு.க. தனது கொள்கை அடையாளங்களை கைவிடுவதில் தீவிரம் காட்டி வருகிறது.

மதச்சார்பின்மைக்கு எதிரான இந்தப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 26th June 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.